ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

19.11.2008 - மலர் 05, இதழ் 37

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## வெள்ளை மாளிகையை அலங்கரித்த ஜனாதிபதிகள்

விலை ரூபா 12

Price Rs. 20.00
20.00



ஸ்வரத்தால் எழும் நாதம்



## இலங்கையிலிருந்தும் விண்வெளிக்கு செய்மதி



## அறிவியல் ஞானி லூயி பாஸ்டர்

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்து வரும் சீனாவின் கலைகள்



சீனாவுக்கு உலகில் கலைப் பாரம்பரியம் தொடர்பான தனி இட முண்டு. சீனாவின் கலைகள் உலகில் வெகுவாக கவரப்படுகின்றன. முறை யான கலாசாரப் பாரம்பரியம் ஒன்று நீண்ட காலமாக சீனாவால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதே அந்நாட் டின் கலைகள் உலகில் பிரபல்யம் அடையக் காரணமாக அமைகின்





றது. அந்நாட்டில் நிலவிய 'கொன்பியூசியஸ்' மதக் கொள்கை யும் 'தாவோயிசம்' மதக்கொள்கை யும் கலைகளின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளன.

சீனாவில் இன்றும் கூட பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்ற அதிக மான கலை அம்சங்கள் உலகில் வேறு எந்த நாட் டின் கலைகளுக்கும் இணையானவை அல்ல. சுவரோவியங்கள், சித்திர அலங்கார வேலைப்பாடு கள் என்பன இந்தக் கலை களில் முக்கிய இடத்தைப் பிடித்தவையாகும்.

அவற்றை கலைஞர்கள் காலத்தால் அழிந்து அற்றுப் போய்விடாது பாதுகாத்து வந்துள்ளனர். அங்கு காணப்படுகின்ற சித்திர வேலைப்பாடு கள், ஓவியங்கள், சிற்பங்கள், சிலைகள் என்பவற்றின் ஊடாக பல்வேறு விட யங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

வடசீனாவில் வாழ்ந்து வந்த கால்நடை மேய்ப்பாளர்கள் அந்நாட் டில் அலங்காரப் பந்தல் அமைக்கும் கலைக்கு பெரும் பங்காற்றியுள்ளனர். இக்கலையானது சீனாவெங்கும் பல்வேறு வடிவங்களில் பரவி வளர்ச்சி யடைவதற்கு அந்த இடையர் பரம்பரை காரணமாக அமைந்திருக் கின்றது.

பட்டுப்புடைவை, கற்களால் ஆன பாத்திரங்கள், பீங்கான் பொருட்கள், மட்பாண்டங்கள் என்பவற்றில் இந்த கலையின் கைவண்ணத்தை காணலாம்.

'டாங்' அரச வம்சம் சீனாவை ஆட்சி செய்த காலப்பகுதி இக்கலைகளின் பொற்காலம் என்று கருதப்படுகின்றது. அக்காலப்பகுதியில் இதன் வளர்ச்சி உச்சக்கட்டத்தைத் தொட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. இக்காலப்பகுதியில் தான் ஆபரணங்களிலும் மரத்தாலான வடிவமைப்புக்களிலும் கலை வெளிப் பாடுகள் வடிவம் பெற்றிருந்தன.

வெட்க உணர்வுடனான கண்கள், அப்பாவித்தனமான முகத்தோற்றம், ரோஜா நிறம் ஊட்டப்பட்ட உதடுகள், இக்காலப் பிரிவின் கலைவெளிப்பாட் டின் முக்கிய பாத்திரங்களாக இருந்தன. துணிகளிலும் கலைகளை வெளிப்படுத் தும் கலை முக்கிய தொழிலாக இருந்து வந்தது.

'ஓப்' மதக்குழுவினரும் கலைகளின் வளர்ச்சிக்கு முழு அளவிலான ஒத்து ழைப்பை வழங்கினர். 'சங்' அரச வம் சத்திலும் சீனாவில் கலைகள் வளர்ச்சி யடைந்தன.





இக்காலப்பகுதியில் ஓடங்கள், இயற்கையான பொருட்கள் என் பவற்றை மையமாகக் கொண்டு கலை கள் வெளிப்படுத்தப்பட்டன. அத்தோடு பூச்சாடிகள், ஆபர ணப் பெட்டிகள் என்பன கலை வெளிப்பாட்டுடன் அலங்கரிக்கப்பட்டன.

பிற்காலத்தில் துணி, ஆடை களிலும் காகிதத்திலும் இந்த அலங்கார வேலைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. இவ் வகைச் சித்திர வேலைப்பாடு களில் கோடுகள் இல்லாதது சிறப்பம்சமாகும்.

'மிங்ஹாமிங்' அரச வம்ச காலத்தில் கலைஞர்கள் ஒன்று திரண்டு புதிய கலை பண் பாட்டு மரமொன்று கட்டி எழுப்பப்பட்டது. கையைப் பயன்படுத்தி அல்லது வர்ணப் பூச்சுக்களால் பரப்பப்பட்ட தான சித்திர, கலை வேலைப் பாடுகள் அறிமுகமாகின.

சீனாவுக்கென்று நீண்ட காலமாக பேணிப்பாதுகாக்கப் பட்டு வந்துள்ள நாகரிகத்தில் கலைப்பாரம்பரியங்கள் இன்றும்கூட அழியாது பாதுகாக்கப்பட்டு வருவது அந்நாடு உலக அரங்கில் அடைந்துள்ள பெருமைக்கும் கீர்த்திக்கும் அடிப்படைக் காரணமாகும்.

**அமீர் ஹுசைன்**

# பசுமைக்குச் செல்வோம்

'பசுமைக்குச் செல்வோம்' என்னும் விடயம் என்னவென்று அறிவீர்களா? பசுமைக்குச் செல்வோம் என்னும் விட யமானது சூழல் ரீதியில் நட்புறவை



வளர்த்துக் கொள்...கும் அதாவது, சூழலைப் பாதிக்கச் செய்யும் நடவடிக் கைகளை தடுத்தல் மற்றும் பெறுமதி மிக்க இயற்கை வளங்களைப் பாதுகாக் கும்-மாசுபடாமல் வைத்துக் கெள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகும். இத்தகைய நடவடிக்கைகளுக்கான தேவை கடந்த சில வருடங்களாக அதி கரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. உலகளாவிய ரீதியில் பூமி வெப்பமடைதல்,துருவ மண்டலத்தில் பனிப்பிரதேசங்கள் உருகுதல், ஓசோன் படலம் மறைதல் போன்றவையே இப் பாதிப்புக்களாகும்.

இத்தகைய இயற்கைக்கு விரோத மான நிலைமைகள் ஏற்படக் காரண மான பல செயல்பாடுகள் இடம்பெறு கின்றன. ரசாயனத் திரவங்களை பீய்ச்சி யடித்தல், தீயணைப்புக்கு ரசாயனங் களைப் பாவித் தல், உயிரினங் களை அழிப்ப தற்கு கிருமிநாசி னிகள் பாவித் தல், தொழிற்சா லைக் கழிவுகள் போன்ற பல செயல்பாடுகள் இயற்கை வளங் களை மாசடை யச் செய்கின் றன. இத்தகைய இயற்கைக்கு விரோத மான செயல்பாடுகள் வெள்ளம், மண் சரிவு, பூமியதிர்ச்சி, சுனாமி, கடல் மட்டம் உயருதல் போன்ற பல இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட மூல காரணமாக அமைகின்றன. இந்த அனர்த் தங்கள் பல உயிரிழப்புக்களை யும் பலருக்கு துயரங்களை யும் ஏற்படுத்துகின்றன.

ஆதலால், சூழலைப்பாதுகாப் பதற்கு என்ன செய்யவேண்டு மென்பதை நாம் கட்டாயம் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள் ளது. அதேவேளை, சூழல் மாசடையாமல் தடுப்பதற்கு நாம் என்னென்ன செய்யாமல் இருக்கவேண்டும் என்பதை யும் உணர்ந்து அதன்படி செயல்பட வேண்டிய காலகட் டம் இதுவாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த சா/தரப் பரீட்சை

# டிசம்பர் 8இல் ஆரம்பம்



இவ்வாண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடு பூராகவுமுள்ள சுமார் 5,300 பரீட்சை நிலையங்களில் மேற்படி பரீட்சை நடாத்தப்பட வுள்ளதோடு, பழைய-புதிய பாடத்திட்டங்களுக் கமைய சுமார் 3 லட்சம் பரீட்சார்த்திகள் இதற்குத் தோற்றவுள்ளனர். அதற்குரிய சகல நடவடிக்கைகளையும் பரீட்சை திணைக்களம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பரீட்சை நடவடிக்கைக்காக அதிபர்கள், ஆசிரியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் உட்பட மொத்தம் 75 ஆயிரம் ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர்.

மேலும், இப்பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் டிசம்பர் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, ஜனவரி 6 ஆம் திகதி நிறைவு செய்யப்படவுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

Vijey விஜய
விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# பழங்களும் மரக்கறிகளும் புற்றுநோயிலிருந்து காத்திடும்

நிறையுணவினை உட்கொள்வதனால் நீரிழிவு மற்றும் இருதய வால்வுகளிலான அடைப்பு நோய்களிலிருந்தும் காத்துக் கொள்ளலாம் என உணவுகள் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளை, பல்வேறுபட்ட பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐரோப்பிய ஆய்வுக் குழுவொன்று, பழங்கள் மற்றும் நார்ச்சத்துள்ள மரக்கறி வகைகளை எமது உணவில் சேர்த்துக் கொள்வதனூடாக





குதவழியை அண்மித்து ஏற்படக்கூடிய புற்றுநோய்களிலிருந்து விலகியிருக்கலாம் என்று தெரிவித்துள்ளது. மேலும், சுவாசப்பை புற்றுநோய்களிலிருந்து எம்மைக் காத்துக் கொள்வதற்காக அதிகளவான பழங்களை உணவில் சேர்த்துக் கொள்வதனூடாக சிறந்த பலனைப் பெறலாம் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், உடலில் தானாகச் சேரும் கொழுப்பு மற்றும் உணவுகளூடாகச் சேரும் கொழுப்புகள் இருதய வால்வுகளில் அடைப்புகளை ஏற்படுத்துகின்றன என்பது நீங்கள் அறிந்ததே. அவ்வாறே, கொழுப்பினால் மார்பகப் புற்றுநோய் இரு மடங்காக அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆகவே, அதிகளவில் சோயா அவரைகளை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் புற்றுநோய்க்கு இலக்காகும் வாய்ப்பினை மூன்று மடங்காகக் குறைத்துக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. தக்காளி மற்றும் சிவப்பு நிற மேற்தோலையுடைய பழங்களிலுள்ள 'லைகோபின்' எனும் நிறமியினாலும் புற்றுநோய் கட்டுப்படுத்தப்படுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மதுசாரம் உள்ள உணவுகளைத் தவிர்த்து, முடிந்தளவு மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகளை உணவில் சேர்த்துக் கொள்வதால் வாய், தொண்டைக் குழி,சுவாசப்பை, மார்பகம், பெருங்குடல், இரைப்பை மற்றும் குதுவழியில் ஏற்படக்கூடிய புற்றுநோய்களிலிருந்து காத்துக் கொள்ளலாம் என பிரான்ஸிய தேசிய உணவு மற்றும் புற்றுநோய் ஆய்வுநிலைய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.



தினமும் 5 வகை மரக்கறி, பழங்கள் மற்றும் குறைந்தளவு மாமிச வகை உள்ளடக்கிய உணவினை உட்கொள்வதனால் சிறந்த பலனைப் பெறலாம் எனவும் கூறப்படுகின்றது.

உலகின் பல நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட சுமார் 7,000 பரிசோதனைகளை அடுத்து, வெல்லம், உப்பு மற்றும் கொழுப்பு அடங்கிய உணவு வகைகளை இயன்றளவு குறைத்து, மரக்கறி மற்றும் பழவகைகளை சேர்த்துக் கொள்வதானது நல்ல உடல் ஆரோக்கியத்தைப் பெற்றுத் தரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-ஜீநு

# நாட்டிலுள்ள 100 பாடசாலைகளுக்கு குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள்

அடுத்த இரு மாதங்களுக்குள் நாட்டிலுள்ள 100 அரச பாடசாலைகளுக்கு குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளை செய்து கொடுக்க உள்ளதாக நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். இதற்கென 'யுனிசெப்' அமைப்பு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



நாடு பூராகவுமுள்ள பாடசாலைகளில் சுமார் 800 பாடசாலைகள் குடிநீர் வசதிகள் இன்றியும் சுமார் 2 ஆயிரம் பாடசாலைகள் மலசலகூட வசதிகள் எதுவும் இல்லாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வசதிகளை சுகாதார அமைச்சினாலோ கல்வி அமைச்சினாலோ நீர்வழங்கல் அமைச்சினாலோ தனியாக செய்து கொடுக்க முடியாதுள்ளன. அதற்கமையவே, 'யுனிசெப்' அமைப்பின் நிதியுதவியின் கீழ் மேற்படி வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. எனவே, மாணவர்கள் அதனை பேணுதலோடு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி

இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH

அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.



60 நாட்களின் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்

FREE FREE இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும்

* இலவச 30 days Easy Way English Book Part1




இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002



## பாடசாலை மாணவர்களுக்கான ஊடக சங்கம்

### விண்ணப்பங்களை அனுப்பி விட்டீர்களா?

தேசிய கல்வி நிறுவகம் - 'விஜய்' இணைந்து நடத்துகின்ற பாடசாலை மாணவர்களுக்கான ஊடக சங்கத்தில் இணைவதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுக் கொண்டிருக்கின்றன.
நீங்கள் இன்னமும் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவில்லையாயின் விரைவாக அனுப்பி வையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு...

தொ.பே இல - 5383653 அல்லது சுயமுகவரியிடப்பட்டு, முத்திரை ஒட்டிய நீள் கடித உறையொன்றை அனுப்பி விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி: 'ஊடக சங்கம்' விஜய், த.பெ.எண் 2037 கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின் பாலைவனங்கள்

உலகில் மழைவீழ்ச்சி மிகக் குறைந்த பிரதேசங்களையே பொதுவாக பாலைவனம் எனக் குறிப்பிடுகின்றனர். பாலைவனங்களில் வருடத்திற்கு 25 சென்றிமீற்றருக்கும் குறைவான மழைவீழ்ச்சியே கிடைக்கின்றது. பொதுவாக வெகு அபூர்வமாக மழை பெய்யும் இடங்களே பாலைவனங்களாகும். பெரும்பான்மையான பாலைவனங்கள் வெப்பம் மிகுந்தவை. ஆனாலும், குளிர் பிரதேசமான அண்டார்டிகாவும் ஒரு பாலைவனமே. இதனை 'குளிர் பாலைவனம்' என அழைப்பர்.


புவியில் மொத்த நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு பாலைவனங்களே. பொதுவாக பாலைவனங்களில் மனிதன் வாழ்வது மிகமிகக் குறைவே. எனினும், வட அமெரிக்காவின் 'கிரேட் பாசின்' பாலைவனத்திலும் 'கொலராடோ' பாலைவனத்திலும் 'சொனோரன்' பாலைவனத்திலும், 'மோஹேவ்' பாலைவனத்திலும் பெருந்தொகையான அமெரிக்க செவ்விந்தியர்களும் மெக்ஸிகன் வம்சத்தினரும் வாழ்கின்றனர்.

பொதுவாக பாலைவனங்களில் 20 சதவீதம் மணற்பரப்புத்தான். எஞ்சியவை சரளைக்கற்கள், பாறைத்துண்டுகள், சிறுமண் துணிக்கைகள் போன்றவையே காணப்படுகின்றன. மிகப் பெரிய பாறைக் கற்கள் பதித்தது போல் சில பாலைவனங்கள் காணப்படுகின்றன. இவற்றை ஹமாடுகள் (Hamadas) என்று அழைப்பர். கல்லும் மண்ணும் நிரம்பிய பாலைவனங்களை 'ரெக்' என்றும் அழைப்பர். உப்பு, யுரேனியம் போன்ற தாதுப் பொருட்கள் இங்குள்ள மண்ணில் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. பெரும்பாலான பாலைவனங்களின் அடியில் இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் வயல்கள் உள்ளன.

கோடைகாலத்தில் பாலைவனங்களின் வெப்பநிலை 58°C செல்சியஸ் வரை உயரும். ட்யூன்ஸ் எனப்படும் மணற் குன்றுகள் பாலைவனத்தின் மற்றொரு சிறப்பம்சமாகும். இம்மணற்குன்றுகளில் சில 250 மீற்றர் வரை உயரம் கொண்டதாக இருக்கும். உயர்ந்த காற்றமுத்தம் கொண்ட பகுதிகளில்தான் உலகின் பல பாலைவனங்களும் அமைந்துள்ளன. அத்துடன், பெரும்பாலான பாலைவனங்கள் கண்டங்களின் மத்தியில் அல்லது பெரிய நாடுகளின் மத்தியில் கடற்கரையில் இருந்து வெகு தொலைவில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. பாலைவனத்தைக் கடக்க பயன்படுத்துவது பொதுவாக ஒட்டகம்தான். அதனால் ஒட்டகத்தை 'பாலைவனக்கப்பல்' என அழைக்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் சுமார் 60,000 சதுர கிலோமீற்றர் அல்லது 23,000 சதுர மைல்களுக்கு மேற்பட்ட பிரதேசம் பாலைவனமாகி வருகின்றது. இது ஏறக்குறைய இங்கிலாந்தின் நிலப்பரப்பின் பாதி அளவிற்கு சமனாகும். 200,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள ஒரு பாரிய பிரதேசம் ஒவ்வொரு வருடமும் பயிர்ச்செய்கைக்கு உதவாத நிலையை அடைகின்றது என்பது ஓர் அதிர்ச்சி தரும் செய்தியாகும்.







## உலகின் பெரிய பாலைவனங்கள்

| பாலைவனங்களின் பெயர் | அவை அமைந்துள்ள நாடுகள் | பரப்பளவு சதுர கி.மீ |
|---|---|---|
| சஹாரா | வட ஆபிரிக்கா | 92,64,650 |
| அரேபியன் | மத்திய கிழக்கு | 25,89,900 |
| கோபி | சீனா | 12,94,950 |
| பட்டகோனியா | ஆர்ஜென்டினா | 6,73,374 |
| கிரேட் விக்டோரியா | அவுஸ்திரேலியா | 6,47,475 |
| கலஹாரி | தென் ஆபிரிக்கா | 5,82,727 |
| கிரேட் பாசின் | அமெரிக்கா | 4,92,091 |
| தார் | இந்தியா/பாகிஸ்தான் | 4,53,232 |
| கிரேட் சாண்டி | அவுஸ்திரேலியா | 3,88,485 |
| காரா-கும் | மேற்கு ஆசியா | 3,49,636 |
| கொலராடோ | மேற்கு அமெரிக்கா | 3,36,687 |
| கிப்சன் | அவுஸ்திரேலியா | 3,10,788 |
| சொனோரன் | அமெரிக்கா | 3,10,788 |
| கிசில்-கும் | மேற்கு ஆசியா | 2,97,838 |
| தாக்லா மக்கான் | சீனா | 2,71,939 |
| இரானியன் | ஈரான் | 2,58,990 |
| சிம்சன்/ஸ்டோனி | அமெரிக்கா | 1,39,854 |
| மோஹேவ் | அமெரிக்கா | 1,39,854 |
| அடடகாமா | சிலி | 1,39,854 |
| நமீப் | ஆபிரிக்கா | 33,668 |

### சஹாரா பாலைவனம்

உலகின் மிகப்பெரிய பாலைவனமாகிய 'சஹாரா' பாலைவனம் பல நாடுகளை உள்ளடக்கி உள்ளது. ஆபிரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள 'சஹாரா' பாலைவனத்தின் மொத்தப் பரப்பு 92,69,000 சதுர கிலோமீற்றராகும். அதாவது 3579000 சதுர மைல்களாகும்.இதன் வடக்கு தெற்காக அகலம் 1280 கிலோமீற்றர். அதாவது 800 மைல்களில் இருந்து 2250 கிலோமீற்றர். அதாவது 1400 மைல்கள் வரை வேறுபடுகின்றது. கிழக்கு மேற்காக 'சஹாரா' பாலைவனத்தின் நீளம் 5150 கிலோமீற்றர் அதாவது 3200 மைல்களாகும்.

### பாலைவனச் சோலை-OASIS

ஓயசிஸ் (OASIS or OASES) என அழைக்கப்படும் பாலைவனச் சோலைகளை பாலைவனங்களின் இடையே காணலாம். சில மைல்கள் இடைவெளியிலிருந்து சில நூற்றுக்கணக்கான மைல்கள் இடைவெளியில் கூட அபூர்வமாகக் காணக்கூடியதுதான் இந்த பாலைவனச்சோலை.


பாலைவனங்களில் தாவரங்கள் மிகக்குறைவாக இருப்பதால் பலமாக வீசும் காற்று மண்ணையும் மணலையும் வாரிக்கொண்டு சென்றுவிடும். அப்படி மணல் சென்று விடும்பொழுது சில நேரங்களில் நிலத்தின் கீழ் உள்ள நிலக்கீழ் நீர்ப்பிரதேசங்கள் வரை அரித்து அந்நீர் வெளியரும்பிச் செல்லும். அவ்விடங்களில் இங்கு பேரீந்து உள்ளிட்ட பல தாவரங்கள் இந்த நீரை நம்பி வளர்கின்றன. நீரும் கிடைக்கும். நிழலும் கிடக்கும் குளிர்ச்சியான இப்பிரதேசம்தான் பாலைவனச் சோலையாகும். சில இடங்களில் ஒரு சிறிய தாவரத்தைச் சுற்றியுள்ள நீர்நிலை அளவில் இருந்து பல நூற்றுக்கணக்கான சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட OASIS பாலைவனச் சோலைகளும் காணப்படுகின்றன. இத்தகைய பாரிய பாலைவனச் சோலைக்கு வடமேல் எகிப்தில் உள்ள SIWA OASIS தக்க உதாரணமாகும். லிபிய பாலைவனம், சீனாவின் தக்ளா மக்கானில் உள்ள பாலைவனச் சோலைகளில் பாரிய அளவிலான பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

-ப.இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலிருந்தும் விண்வெளிக்கு ஒரு செய்மதி


இந்தியாவின் முதல் செய்மதி


பாகிஸ்தானின் முதல் செய்மதி


மலேசியாவின் முதல் செய்மதி

**செய்மதிகளை வானில் இருந்து எம்மை நோக்கும் அவதானிப்பாளர்கள் என்று கூறலாம். காரணம், உலகின் ஒவ்வொரு மூலையில் நடக்கும் சம்பவங்களைத் தெரிந்து கொள்ளவும் உலகில் யார் எங்கிருந்தாலும் நம் அனைவரையும் ஒருவருடன் ஒருவர் தொடர்பை ஏற்படுத்தவும் செய்மதிகள் பேருதவி புரிகின்றன. அத்துடன், எமது தொலைபேசி தொடர்புகளை அங்குமிங்கும் கொண்டு செல்லவும் காலநிலையை அவதானித்து எமக்கு எதிர்வுகூறவும் உதவுகின்றன.**

பொதுவாக செய்மதியொன்று புவியின் சுற்றுப்பாதையில் பயணிக்கும்பொழுது விமானமொன்று பறக்கும் வேகத்தை விட 10 மடங்கு முதல் 30 மடங்கு வரையிலான வேகத்தில் செல்லும். செய்மதியின் இந்தளவு வேகமான பயணம்தான் செய்மதியொன்று புவியின் மேல் உடைந்து விழாமலும் விண்வெளியில் மேல் நோக்கித் தள்ளப்பட்டாலும் வானில் ஒரு தளத்தில் தொடர்ந்து இருப்பதற்குக் காரணமாக இருக்கின்றது. இத்தகைய வேகத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் இடைவிடாது தொடர்ந்து அதே வேகத்தில் புவியைச் சுற்றிப் பயணிக்கவும் செய்மதி ஒன்றிற்கு விமானத்திற்குத் தேவையான அளவு எரிபொருள் தேவைப்படுவதில்லை. அது தனது சுற்றுப்பாதையில் தங்கி, தொடர்ந்து பயணிக்கக்கூடியதாக இருப்பதற்கு துணை புரிவது புவியீர்ப்புச் சக்தியும் புவிக்கு வெளியே உள்ள சூரியனின் ஈர்ப்புச் சக்தியுமே ஆகும்.

''புவியில் இருந்து 22,300 மைல் தொலைவில் விண்வெளியின் சுற்றுப் பாதையில் பயணிக்கக்கூடிய மூன்று இயந்திரங்களைப் பயன்படுத்தினால் முழு உலகையும் உள்ளடக்கக்கூடிய விதத்தில் தகவல்கள் அனைத்தையும் புவிக்கு பெற்றுக்கொள்ள முடியும்''. இது ஆர்த்தர் சி.க்ளார்க் அவர்களின் ஆருடமாகும். இன்று உலகம் ஏற்றுக்கொண்டுள்ள சத்தியமாக இது திகழ்கின்றது.

இக்காரணத்தால் முழு உலகமும் ஒரே கிராமமாகக் கருதப்படுகின்றது. இதற்கு சமனாக இன்று உலகில் தகவல் தொழில்நுட்பமானது மிக முன்னேற்றகரமான நிலையில் உள்ளது.

## இலங்கைக்கும் விண்வெளியில் ஓரிடம்

தகவல் தொழில்நுட்ப செய்மதியின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு இலங்கையிலிருந்தும் செய்மதியொன்றை விண்வெளிக்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளில் இலங்கைத் தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் இப்பொழுது ஏற்பாடுகளை செய்து வருகின்றது. செய்மதியொன்றை தகுதியான முறையில் உற்பத்தி செய்யவும் அதனை விண்வெளிக்கு கொண்டு சென்று, நிலையானதொரு இடத்தில் தக்க வைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இச்செய்மதிக்கு ஆர்த்தர் சி.க்ளார்க் அவர்களின் பெயரைச் சூட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. செய்மதி தொழில்நுட்பத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய ஆர்த்தர் சி.க்ளார்க் அவர்களின் நாமம் சூட்டப்பட்ட உலகின் முதலாவது தொடர்பாடல் செய்மதி இதுவேயாகும்.

## இதுவரை காலமும் எமக்கு தகவல் வழங்கியது....

வேறு நாடுகளின் செய்மதிகளின் உதவியுடனேயே இதுவரை காலமும் இலங்கை செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வந்துள்ளது. அதற்காக எமது நாடு ஆண்டுதோறும் கோடிக் கணக்கான பணத்தைச் செலவழிக்கின்றது. நாம் இணையத் தளங்களைப் பயன்படுத்தி விளையாட்டுச் செய்திகளையோ வெளிநாட்டு நிகழ்ச்சிகளையோ அல்லது நேரடி நிகழ்ச்சிகளையோ பார்க்கும் ஒவ்வொரு விநாடிக்கும் பெருந்தொகை பணம் அறவிடப்படுகின்றது. அதற்கு காரணம், வேறு நாடுகளின் செய்மதியை நாம் பயன்படுத்துவதே ஆகும்.

## இலங்கைக்குள்ள பயன்பாடுகள்

எமது நாட்டில் செயற்படுத்த உத்தேசித்துள்ள செய்மதி தொழில்நுட்பம் வெற்றி அளித்தால் அதன் மூலம் எமக்கு கிடைக்கும் பயன்பாடுகள் வருமாறு:-

- இலங்கையின் சகல இடங்களிலும் இணையத்தள வசதிகளை அதி வேகமாகப் பயன்படுத்தும் வாய்ப்பினைப் பெறல்.
- வானிலை, காலநிலைத் தகவல்களை துரிதமாகவும் இலகுவாகவும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.
- பாதுகாப்புத் தொடர்பான சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.
- எந்தவொரு இடத்தினதும் வரைபடத்தை மிகவும் இலகுவாகத் தயாரித்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெறல்.
- தொலைபேசித் தொடர்புகள் மற்றும் வெளிநாட்டு நிகழ்ச்சிகளை நேரடியாகப் பார்த்து ரசிப்பதற்காக அந்நிய நாடுகளின் செய்மதிகளுக்காக நாம் செலவிடும் பணத்தை சேமிக்கும் வாய்ப்புப் பெறல்.
- புதிய செய்மதியில் உள்ள மேலதிக கொள்ளளவு பிரமாணத்தை வேறு நாடுகளுக்காகவும் ஒதுக்கி, அதன் மூலம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொடுத்தல்.




## கொன்ஸ்டன்டின் சிஒல்கொவ்ஸ்கி

ரஷ்ய கணித ஆசிரியரான கொன்ஸ்டன்டின் சிஒல்கொவ்ஸ்கி என்பவரே செய்மதியொன்றை விண்கலத்தின் உதவியுடன் விண்வெளிக்கு அனுப்பமுடியும் என்ற கருத்தை முதன்முதலாக ஆய்வறிக்கை மூலம் வெளிப்படுத்தினார். இது 1903இல் நிகழ்ந்தது. அவர் தமது அறிக்கையை 'மீள்செயற்பாட்டு உபகரணங்களைப் பயன்படுத்திக் கண்காணித்தல்' எனும் தலைப்பில் தொடர் கட்டுரைகளாக எழுதி வந்தார். அதில் விண்கலத்தைப் பயன்படுத்தி செய்மதியை விண்வெளிக்கு அனுப்பமுடியும் என்றும் புவியில் விழாமல் விண்வெளியில் தொடர்ந்து இருப்பதற்கு குறைந்தது விநாடிக்கு 8 மைல் வேகத்தில் அது பயணிக்க வேண்டும் என்றும் கணித்துக் கூறினார். அது மாத்திரமல்ல, அந்த விண்கலத்திற்கு எரிபொருளாக திரவ ஐதரசனையும் ஒட்சிசனையும் பயன்படுத்த முடியும் என்பதையும் முதன்முதலாக உலகிற்கு வெளிப்படுத்தியவரும் அவரே.


கொன்ஸ்டன்டின் சிஒல்கொவ்ஸ்கி


ஹேர்மன் பொட்டோனிக்


ஆர்த்தர் சி.க்ளார்க்

## ஹேர்மன் பொட்டோனிக்

ஜேர்மனியரான ஹேர்மன் பொட்டோனிக் 1928 இல் எழுதிய ஒரு நூலில் விண்வெளிக்குச் செல்லவும் அங்கு தங்கியிருப்பதற்கும் மனிதன் செய்யக்கூடிய விடயங்கள் குறித்து திட்டமொன்றை முன்வைத்தார். விண்வெளியில் தங்குவதிலுள்ள முரண்பாடுகள் சம்பந்தமாக 'ரொக்கட் மோட்டார்' எனும் பெயரில் எழுதப்பட்ட நூலில் சுற்றுப்பாதையில் தங்கியிருப்பதற்கு விண்வெளி மத்திய நிலையமொன்றை அனுப்பமுடியும் என்பதை முதன்முதலாக வெளிப்படுத்தினார்.

விண்வெளியில் தங்கக்கூடிய செய்மதி மூலம் புவியை அவதானிக்க முடியும், அதனை சமாதானத்திற்கும் ராணுவக் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கும் விஞ்ஞான ஆய்வுகளுக்கும் பயன்படுத்த முடியும் என அந்நூலில் முதன்முதலாக கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன. சிஒல்கொவ்ஸ்கி அவர்களால் முதன்முதலாக வெளிப்படுத்தப்பட்ட செய்மதிக்கொள்கை குறித்து மேலும் விளக்கமளித்த பொட்டோனிக், புவியில் இருந்து அச்செய்மதியுடன் வானொலி மூலம் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஆர்த்தர் சி.க்ளார்க்

1945 இல் 'வயர்லஸ் வேர்ல்ட்' எனும் சஞ்சிகையில் கட்டுரை ஒன்றை எழுதிய கலாநிதி ஆர்த்தர் சி.க்ளார்க், விண்வெளியில் தங்கக்கூடிய தொடர்பாடல் செய்மதிகள் மூன்றினைக் கொண்ட தொகுதியை நிறுவுவதன் மூலம் தகவல்களை உலகம் முழுவதும் அனுப்ப முடியும் என முதன்முதலாக வெளிப்படுத்தினார். செய்மதியை விண்வெளிக்கு அனுப்புவதற்காக செயற்றிட்டங்கள், அதனை விண்வெளியில் தங்க வைக்கக்கூடிய விதத்தை சித்திர, வரைபடங்களூடாக தெளிவுபடுத்தி அந்தக் கட்டுரை எழுதப்பட்டது. அதனாலேயே நாம் அவரை 'செய்மதித் தொடர்பாடலின் தந்தை' எனக் கூறுகின்றோம்.

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் ர

**உலக வரலாற்றில் 1789 பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் ஏற்பட்ட மாபெரும் சமூக எழுச்சிகளில் ரஷ்யப் புரட்சிக்கு நிகரானது வேறொன்றுமில்லை. அது ரஷ்யாவின் அடிப்படை அமைப்பையே அடித்தளம் வரை மாற்றியமைத்தது மட்டுமன்றி அடுத்த 75 வருடங்களுக்கு முழு உலகிலும் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஓர் இயக்கத்தையும் பல்வேறு நாடுகளின் பிரச்சினைகளில் முக்கிய பங்களிப்பை நல்கும் நிலையையும் ஏற்படுத்திக் கொடுத்தது.**

## புரட்சிக்குரிய காரணங்கள்

### திறமையற்ற சார் மன்னர்களின் ஆட்சி

ரஷ்யப் புரட்சியை வருவித்த காரணங்கள் பெரும்பாலும் பிரெஞ்சுப் புரட்சியை (பிரான்ஸிய புரட்சியை) ஏற்படுத்திய அதே காரணங்களைப் போன்றவையே. பிரான்ஸைப் போன்றே ரஷ்யாவிலும் தொடர்ச்சியாக ஆட்சியை மேற்கொண்ட சார் வம்ச மன்னர்களின் திறமையற்ற ஆட்சியும் கொடூரமான வல்லாட்சியும் புரட்சிக்கான மிக முக்கிய காரணங்களாக அமைந்தன. பல சந்தர்ப்பங்களில், பிற நாடுகளுடன் நடந்த போர்களில் ரஷ்ய இராணுவம் அடைந்த படுதோல்விகள், சர்வாதிகார ஆட்சி முறையின் திறமையின்மையையும் விவேகமின்மையையும் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டின. இறைமியப் போரிலும் ரஷ்ய-ஜப்பானியப் போரிலும் ரஷ்யா அடைந்த படுதோல்விகள் சார் மன்னர்களின் ஆட்சியின் தகுதிக்குறைவை நிரூபித்ததுடன், மக்கள் உள்ளங்களில் அதிருப்தியை ஏற்படுத்தின. இந்த அதிருப்தியை முதலாம் உலக மகா யுத்தம் புரட்சியாக உருமாற்றியது. சாரின் சர்வாதிகார ஆட்சி, முதல் உலகப் போரில் ஏற்பட்ட நெருக்கடிகளை மேற்கொள்ள முடியாமல் போனவை என்பன புரட்சிக்குரிய ஏனைய காரணங்களாகும்.

### சமூக ஏற்றத் தாழ்வுகள்

பிரான்ஸைப் போன்றே ரஷ்ய சமுதாயமும் பிரபுக்கள், குருவாயம், ஊழியர் எனும் மூவர்க்கங்களாக, அதி விசாலமான ஏற்றத் தாழ்வுகளுடன் நிலைத்து நின்றது. நிலத்தின் பெரும்பகுதி பிரபுக்களுக்கும் திருச்சபைக்குமே சொந்தமானது. உயர் அரச உத்தியோகங்களை பிரபுக்களே வகித்தனர். அதன் நிர்வாகமும் அவர்கள் கைகளிலேயே இருந்தது. ஊழியர், கூலி விவசாயிகளைக் கொண்ட வறிய மக்கள் பிரான்ஸின் மூன்றாம் குடித்திணையைப் போன்றே வறுமையிலும் கஷ்டத்திலும் அல்லலுற்றனர். இவர்கள் சார் மன்னர்கள் மீது அளவில்லா அதிருப்தி கொண்டனர். இத்தகைய அதிருப்தியான நிலையில், ஊழியர்கள், கூலி விவசாயிகள் தமக்கு விமோசனம் பெற்றுத்தரப் போவதாகக் கூறும் எந்த இயக்கத்தையும் மனப்பூர்வமாக ஆதரிக்க ஆயத்தமாக இருந்தனர்.

### அறிவுப் புரட்சி

ரஷ்யப் புரட்சிக்கு இறுதிக் காரணமாக அமைந்தது பிரான்ஸியப் புரட்சியைப் போன்றே ரஷ்யாவிலும் ஏற்பட்ட அறிவுப்புரட்சியாகும். அது மக்களின் உள்ளங்களைப் புரட்சிக்கு தயார் செய்து பதப்படுத்தியது. இக்கால கட்டத்தில் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டிருந்த அளவிற்கு ரஷ்யாவில் சமூகப் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. அறிவியல் விழிப்புணர்ச்சியும் பெரிதும் ஏற்படவில்லை. சார் மன்னர்கள் ரஷ்யாவினுள் மேற்கு ஐரோப்பிய சீர்திருத்தம் மற்றும் அறிவியல் விழிப்புணர்ச்சி, புரட்சிகர சிந்தனைகள் புகாவண்ணம் பலமான தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்திருந்ததே இதற்குக் காரணமாகும். எனினும், மெல்ல மெல்ல மேற்கின் உதாரணங்களும், சிந்தனைகளும் நாட்டினுள் நுழைந்து அரசாங்கத்திற்கு முழு எதிரான ஒரு இயக்கத்தை ஆரம்பிக்க காரணங்களாய் அமைந்தன. ரஷ்யாவில் ஓர் இலக்கிய மறுமலர்ச்சியும் மலர்ந்தது. டோல்ஸ்டோய் (Tols toy) டோர்கனேவ் (Turgenev) டோஸ்ட்டோய் விஸ்கி (Dostoievsky) போன்ற எழுத்தாளர்களின் புகழ் பெற்ற காவியங்கள் ரஷ்ய இளைஞர்களின் உள்ளங்களையும் சிந்தனைகளையும் கொள்ளை கொண்டன. நாட்டில் கல்வியும் அறிவும், தாராள சிந்தையும் படைத்த வகுப்பினர், மேற்கு நாடுகளில் போன்று அரசியல் சீர்திருத்தங்களை வேண்டி நின்றனர். கார்ல் மார்க்ஸினதும் (Karl Marx) பக்கூனினதும் (Bakunin) போதனைகளால் கவரப்பட்டவர்கள் சமூகவுடைமை வாதத்தையும் புரட்சிகரமான ஆட்சி மாற்றத்தையும் வேண்டிச் செயல்பட்டனர். முதலாளித்துவ சமுதாய அமைப்பை தகர்த்தெறிந்து பொதுவுடைமைவாத புரட்சிகர அரசு அமைய வேண்டுமென்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.


லெனின்

### சமூகவுடைமைவாதம் பரவுதல்


1880 க்குப் பின்னர் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்களின் பயனாக எழுந்த புதுத் தொழிலாள வர்க்கத்தினரிடையே சமூகவுடைமை கருத்துக்கள் வேரூன்றி வளர்ந்தன. மெக்சிம் கோர்க்கி (Maxim Gorky) போன்ற எழுத்தாளர்களினால் பிரசாரம் செய்யப்பட்ட கார்ல் மார்க்ஸின் தத்துவங்கள், தொழிலாளர்களின் ஆதரவை அதிகமாகப் பெற்றன. புரட்சிகர சமூகவுடைமைவாதம் அதிசயத்துக்குரிய முறையில் வளர்ந்து பல அறிவொளிகளையும் தன் பக்கமாய் கவர்ந்தது. அத்துடன், சமூகவுடைமைவாதிகள் 1901 இல் ஒரு சமூக புரட்சிவாத கட்சியை நிறுவி பிரபுக்களின் பாரிய விளைநிலங்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்றும் அவை விவசாயிகளிடையே சிறுசிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினர்.


புரட்சியில் ஸ்டாலினின் பங்களிப்பு

### பொல்சுவிக்கரும் மென்சுவிக்கரும்

1903 இல் சமூக புரட்சிவாத கட்சியினர் மத்தியில் ஒழுங்குகள் நடைமுறைகள் பற்றி எழுந்த வேறுபாட்டினால் கட்சி இருகூறுகளாகப் பிளவுபட்டு லெனின் தலைமையில் பலர் கட்சியிலிருந்து விலகினர். இவர்கள் 'பொல்சுவிக்கர்' (Bolsheviks) என்று அழைக்கப்பட்டனர். பொல்சுவிக் என்றால் பெரும்பான்மையினர் என்று அர்த்தமாகும். கட்சியின் மிதவாதிகள் 'மென்சுவிக்கர்' (Mensheviks) அல்லது சிறுபான்மையினர் என அழைக்கப்பட்டனர்.

பொல்சுவிக்கர், கார்ல் மார்க்ஸின் கொள்கைகளில் இருந்து அணுவளவேனும் விலகாது ஒழுக வேண்டுமென்றும், எக்காரணத்தையிட்டும் அவர்கள் வேறெந்தக் கட்சியுடனும் இணையலாகாது என்றும் அவ்வாறு நடப்பதன் மூலமே தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சியை உண்டு பண்ண முடியுமென்றும் கூறினர்.


கார்ல் மார்க்ஸ்

மென்சுவிக்கர்களோ பொல்சுவிக்கரைப் போன்று தீவிர முழுமாற்றவாதிகள் அல்லர். சமூகவுடைமைவாதத்தினை மெதுவான, படிப்படியான மாற்றங்கள் மூலமே ஏற்படுத்தும் நோக்கம் கொண்டவர்கள். பொல்சுவிக்கரின் இரு பெரும் தலைவர்கள் லெனினும் ட்ரொஸ்கியுமாவர்.

### லெனின்

விளடிமீர் இலிக் உலியனோவ் என்பவரே பிற்காலத்தில் லெனின் எனும் புனைப்பெயரைக் கொண்டார். 1870, ஏப்ரல் 22 ஆம் நாள் சிம்பிர்ஸ்க் எனும் ஊரில் பிறந்த லெனின் தனது 16ஆவது வயதில் காசான் பல்கலைக்கழகத்தில் மாணவனாகச் சேர்ந்தார். அங்கு புரட்சி இயக்கமொன்றில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டதுடன் அவரின் பல்கலைக்கழகப் படிப்பு முடிவுற்றது. எனினும், தொடர்ந்து ரஷ்யப்புரட்சிக் கூட்டங்களில் பிரசாரத்தில் ஈடுபட்டு தனக்கென ஒரு செல்வாக்கை பெற்றுக்கொண்டார். கார்ல் மார்க்ஸின் பொதுவுடைமைக் கோட்பாட்டை ரஷ்ய மொழியில் மொழி பெயர்த்தார். தனிமையில் சுய முயற்சியில் சட்டப்பரீட்சைக்கு ஆயத்தம் செய்து 1891 இல் பீற்றோகிராட் பல்கலைக்கழகத்தில் முதன் மாணவனாக தேறினார். அதே ஊரில் 1893 இல் சட்டத்தரணி தொழிலை ஆரம்பித்தார். சட்டத்தரணி தொழிலை விட நகரப்புற தொழிலான வர்க்கத்தினரிடையே மார்க்ஸ் வாதத்தை பரப்புவதில் அதிக நேரம் செலவிட்டார்.


செஞ்சேனை


செஞ்சேனையுடன் ட்ரொட்ஸ்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யப் புரட்சி


பொல்சுவிக்கர் கூட்டம்

அதனால், தொழிலாளரிடையே அபிரிமிதமான செல்வாக்கைப் பெற்றார். பின் சில ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று மார்க்ஸிய கோட்பாடுகளை பிரசாரம் செய்த லெனின் 1895 இல் நாடு திரும்பி தொழிலாளர் வேலை நிறுத்தத் திற்கு தலைமை தாங்கிய பொழுது கைது செய்யப் பட்டு 14 மாத சிறைவாசம் அனுபவித்தார். பின் 3 ஆண்டுகள் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டு அங்கிருந்து மியூனிக் சென்று இஸ்க்ரா (Iskra) எனும் பத்திரிகை ஆசிரியரானார். 'இஸ்க்ரா' என்றால் 'தீப்பொறி' என்று அர்த்தமாகும். இப்பத்திரிகை ரஷ்யா எங்கும் இரகசியமாக விநியோகிக்கப்பட்டது. அதனைப் படித்த தொழிலாளர்கள் தமது விமோசனத்திற்கான காலம் நெருங்கிவிட்டதாக உணர்ந்தனர். 1902 இல் லெனின் லண்டனில் குடியேறி அப்பத்திரிகையை தொடர்ந்து பிரசுரித்து பரவலாக விநியோகித்து கார்ல் மார்க்ஸின் கொள்கைகளையும் வர்க்கப் புரட்சியையும் எங்கும் பரப்பினார். பின்னர் லண்டனில் கூடிய புரட்சிவாத கட்சியின் பிளவினால் பொல்சுவிக் கட்சியின் தலைவரானார். மென்சுவிக்கின் பலத்தைக் குறைக்க 1904 இல் 'முற்போக்கு' எனும் பத்திரிகையை ஆரம்பித்தார். ரஷ்யப் புரட்சிவாத கொள்கைக்கு தலைமை தாங்கி அதனை நோக்கி வீறு நடைபோட்டார்.





உலகளாவிய ஒக்டோபர் புரட்சியின் தாக்கம்



## லியோன் ட்ரொட்ஸ்கி Leon Trotsky

லியோன் ட்ரொட்ஸ்கி ரஷ்யாவில் பொதுவுடைமைப் புரட்சியை சிருஷ்டித்து சோவியத் அரசாங்கத்தை நிறுவிய தலைவர்களில் ஒருவர். இவர் 1879 இல் ரஷ்யாவில் யூத குலத்தில் பிறந்தார். ஒடேசா பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற அவர் கல்வி முடிந்ததும் ஒரு சமூகவுடைமைவாதியானார். இதனால், இவரது பெற்றோர் இவரை ஏற்க மறுத்துவிட்டனர். இவரின் புரட்சிவாதக் கருத்துக்களை கண்ட அரசு 1900 இல் இவரை சைபீரியாவுக்கு நாடு கடத்தியது. 1902 இல் சைபீரியாவிலிருந்து தப்பிய ட்ரொட்ஸ்கி லண்டனுக்குச் சென்று லெனினுடன் 'இஸ்க்ரா' பத்திரிகையில் பணியாற்றினார். 1903 இல் இருவருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு 1905 இல் ரஷ்யாவுக்குத் திரும்பி அவ்வாண்டு ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியில் பங்கு பற்றவே அரசு அவரைக் கைது செய்து சைபீரியாவுக்கு மீண்டும் நாடு கடத்தியது. வழியில் அவர் தப்பி, ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவுக்குச் சென்று 'பிராவ்டா' (Pravda) எனும் பத்திரிகையை நடாத்தினார்.

1914 இல் முதலாம் உலகப் போருக்கு எதிராகப் பிரசாரம் செய்ததால் ஆஸ்திரியாவில் இருந்து பிரான்ஸிற்கும் பின்னர் ஸ்பெயினுக்கும் அதன்பின் அமெரிக்காவிற்கும் சென்று வசித்து வந்தார். 1917 மார்ச்சில் ரஷ்யா திரும்பி மீண்டும் லெனினுடன் ஒன்று சேர்ந்து மாபெரும் ஒக்டோபர் புரட்சியை நடத்தி வெற்றியும் கண்டார். இவரின் அரும் முயற்சியினால் 'ரஷ்ய செஞ்சேனை' பல மகத்தான வெற்றிகளை ஈட்டித்தந்து புரட்சியில் பாரிய வெற்றியும் கண்டது.

## ரஷ்யப் புரட்சியின் வருகை

சாரின் சர்வாதிகார ஆட்சியில் ஜப்பான்-ரஷ்ய யுத்தத்தில் ரஷ்யா படுதோல்வி அடைந்தமையும், 1915 இல் முதலாம் உலகப் போரில் ரஷ்யா அடைந்த தோல்விகளும் சாரின் உறுதியின்மையையும் நேர்மையின்மையையும் பறைசாற்றின. மக்களின் ஆத்திரம் எல்லை கடந்தது. இதற்கிடையில் ரஸ்புட்டின் (Rasputin) எனும் சந்நியாசி அரண்மனையில் செல்வாக்குப் பெற்று மன்னனை மேலும் தவறான வழியில் இட்டுச் சென்றான். 1916 இல் ரஸ்புட்டின் சுட்டுக் கொல்லப்பட்டான். அதிகாரிகளின் திறமைக் குறைவாலும் கொடுங்கோன்மையினாலும் கலகம் உண்டாயிற்று. விவசாயிகள் கிளர்ச்சி செய்தனர். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இராணுவத்தினர் யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்த மறுத்தனர். நாட்டில் பஞ்சமும் உணவின்மையும் மக்களின் துன்பங்களைப் பன்மடங்கு அதிகரித்தன.


டோர்கனேவ் (Turgenev)

1917 மார்ச் எட்டாம் திகதி பெற்றோகிராட்டில் ஏற்பட்ட 'பாண்' கலகங்களைத் தொடர்ந்து, துன்புற்ற தொழிலாளர்கள் புரட்சியை தாமாகவே ஆரம்பித்தனர். பெற்றோகிராட் இராணுவத் துருப்புகள் கலகத்தை அடக்க அழைக்கப்பட்ட பொழுது அவர்களும் புரட்சிக்காரருடன் சேர்ந்து கொண்டனர். டூமா ஒரு தற்காலிக அரசாங்கத்தை அமைத்து நிலையைச் சமாளிக்க முயன்றது. டூமா வற்புறுத்தலின் பேரில் சார் மார்ச்சில் பதவியை துறந்தார்.


மொஸ்கோ செஞ்சதுக்கத்தில் லெனினும் ட்ரொட்ஸ்கியும்

## ஒக்டோபர் புரட்சி

மார்ச் மாதம் தற்காலிக அரசு அமைக்கப்பட்டது. அதனை கெரென்சிக்கி தலைமை ஏற்று நடாத்தினார். ஆனால், அவருடைய சாத்வீகப் போக்கு பொல்ஸ்விக்கருக்குப் பிடிக்காததால் அதன் தலைவர்களான லெனினும் ட்ரொஸ்க்கியும் 1917 ஆம் ஆண்டு நவம்பரில் அரசாங்கத்திடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றினர். நொவெம்பர் 7 ஆம் நாள் முன் ஏற்பாடுகளின் படி பெற்றோகிராட் தொழிலாளரும் போர் வீரர்களும் அரச அலுவலகங்களைக் கைப்பற்றினர். இதனைக் கண்ணுற்ற ஆங்கிலேயர் ஒருவர், ''புரட்சிக்காரருக்கு முன் தற்காலிக அரசாங்கம் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்தது'' என்று வர்ணித்தார். அரச துருப்புக்கள் இலகுவாக தமது நடவடிக்கைகளை மேற்கொண்டன. கெரென்சிக்கி ஓட்டம் பிடித்தார். அதிகாரம் முழுவதும் லெனின், ட்ரொஸ்க்கி ஆகிய இருவரின் கையில் குவிந்தன. புதிய அரசாங்கத்திற்கு லெனின் தலைவரானார். ட்ரொஸ்க்கி வெளிவிவகார அமைச்சரானார். இவ்வாறாக இரண்டாவது புரட்சி வெற்றி பெற்றது. இரத்தம் சிந்தாமல் அரசியல் அதிகாரம் கைமாறியது.

அக்காலத்தில் ரஷ்யாவில் நடைமுறையில் இருந்த பழைய கிரேக்க பஞ்சாங்கத்தின்படி புரட்சி நடந்தேறிய நவம்பர் 7 ஆம் நாள், ஒக்டோபர் 25 ஆம் நாளாக இருந்தமையினால் அது 'ஒக்டோபர் புரட்சி' எனும் பெயரைப் பெற்றது.

-ப.இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர செதுக்கலுக்குப் பிரசித்தி பெற்ற எம்பக்க


எம்பக்க தேவாலயம்

இலங்கையில் மர செதுக்கல் வேலைப்பாடுகளுக்குப் பெயர் பெற்ற இடமாக மத்திய மாகாணத்தில் உள்ள எம்பக்க தேவாலயம் இருந்து வருகின்றது. எம்பக்க தேவாலயம் பேராதனையில் இருந்து எட்டு மைல் தொலைவில் அமைந்துள்ள தவுலகலைப் பிரதேசத்தில் அமைந்திருக்கின்றது. முற்றிலும் மர வேலைப்பாடுகள் அடங்கிய இந்த தேவாலயம், கம்பளை ராசதானியை ஆட்சி புரிந்த விக்கிரமபாகு மன்னனால் நிர்மாணிக்கப்பட்டதாகும் என்று வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன.

இந்த தேவாலயத்தின் நிர்மாணத்திற்கும் அங்குள்ள மர செதுக்கலுடனான கலை நிர்மாணங்களுக்கும் அக்காலத்தில் வாழ்ந்த சித்திர மற்றும் செதுக்கல் வேலைப்பாடுகளுக்குப் பிரசித்தி பெற்ற கலைஞரான தெல்மட மூலாச்சாரி என்பவர் உதவியுள்ளார்.

எம்பக்க தேவாலயமானது அங்குள்ள செதுக்கல்களுக்கு மட்டும் பிரபல்யம் பெறவில்லை. மாறாக, பௌத்த மத வழிபாட்டு நடவடிக்கைகளுக்காக, வெவ்வேறாக நிர்மாணிக்கப்பட்டுள்ள எட்டு கட்டடங்களை இங்கு காணலாம். அவற்றில் சிம்மாசனம் தவிர்ந்த, ஏனைய அனைத்து தளபாடத் தேவைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆயினும், சிம்மாசனக் கட்டடமானது (ரிட்டா கெய), குறித்த வழிபாட்டுத்தள கட்டடங்கள் அமையப்பெற்றுள்ள இடத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் உள்ள சிறிய மலைமுகட்டில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதில் மத அனுஷ்டானங்கள் செய்யும் மண்டபம், மேள தாளம் முழங்கும் மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மண்டபத்திற்குள் நுழையும் இடம் 'வாகல்கட' (நுழைவாயில்) என்று அழைக்கப்படுகின்றது.

பல்வேறு விதமான அலங்கார மரவேலைப்பாடுகளை எம்பக்க தேவாலயத்தில் காணமுடியும். இலங்கையில் வேறு எங்கும் காண முடியாத மர வேலைப்பாடுகள் இங்குள்ளன.

கண்டி, தலதா மாளிகையில் காணப்படுகின்ற வைபவ மண்டபத்தின் (மகுல்மடுவ) தூண்களுக்கு நிகரான, செதுக்கல் வேலைப்பாடுகள் அடங்கிய தூண்களை எம்பக்க தேவாலயத்திலும் காணலாம்.

அன்னப்பறவை ஜோடி, சிங்கம், யானை, கழுகு, தேவதைகள் நடனம் ஆடுதல் உள்ளடங்களாக பலவிதமான மர செதுக்கல்களை இங்கு காணலாம். மரத்தாலான தூண்களில் 514 வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன. இந்த தேவாலயத்தில் அழகிகள் நடனமாடிக் கடவுளுக்கு நேர்த்திக்கடன் செய்வது மரபாக இருந்து வந்துள்ளது. மொனர (மயில்) என்ற பெயரிலான அறை ஒன்றும் உள்ளது.

வரலாற்றுப் பொக்கிஷங்களில் ஒன்றாக, அக்கால கலைப் பாரம்பரியத்தின் சான்றாக மர வேலைப்பாடுகள் அடங்கிய எம்பக்க தேவாலயம் இன்றும் பக்குவமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

**அமீர் ஹுஸைசன்**


நாற்கோண மண்டபம் (வாகல்கட)


அழகி


மகர வேலைப்பாடு


மல்யுத்தம்





## 2008 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



**மாறை/மின்ஹாத் தேசிய பாடசாலையைச் சேர்ந்த பாத்திமா இஸ்மா, 123 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதோடு, பாடசாலையில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் திக்குவல்லையைச் சேர்ந்த மொஹமட் இம்ரான்-உம்மு ஸரீரா தம்பதிகளின் புதல்வியாவார்.**



**மட்/அல் ஹிறா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.ஏ.றொஷ்னி அஹமட், 141 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் காத்தான்குடி-05, ஏ.எல்.எம்.அஷ்ரப் (சமாதான நீதவான்)-றிஹானா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.**



**முறுதகஹமுலை, பாத்திமா மகளிர் பாடசாலையில் கல்வி கற்கும் பாத்திமா சாகிரா 117 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் தெல்லங்கையைச் சேர்ந்த சஹாப்தீன்-ருமைசா தம்பதியினரின் புதல்வியாவார்.**



**களு/அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் பாத்திமா றுகையா, 146 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ள தோடு, பாடசாலையில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் தர்கா நகரைச் சேர்ந்த ரிழ்வான்-ஸிம்னா தம்பதிகளின் புதல்வியாவார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்வரத்தால் எழும் நாதம்

**இன்னிசை மீட்ட இசைக்கருவிகள் அவசியமாகும். இன்றைய இசை உலகில் பல்வேறு வாத்தியக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஸ்வரக்கட்டைகள் (Key Board) என அழைக்கப்படும் அத்தகைய வாத்தியக் கருவி இன்று இசைத்துறையில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அத்தகைய ஸ்வரக்கட்டைகளைக் கொண்ட வாத்தியக் கருவி குறித்து பல விடயங்களை அறிந்து கொள்வோம்.**

## வாத்தியக் கருவிகளின் வகைகள்

ஸ்வரக் கட்டைகளைக் கொண்ட வாத்தியக் கருவிகளின் வகைகளை ஐந்து பிரதான வகைகளாகப் பிரிக்கலாம். அவை:

- பியானோ (Piano)
- எக்கோடியன் (Accordion)
- ஓகன் (Organ)
- மெலோடிக்கா (Melodica)
- சர்ப்பினா (Harmonium)

## பியானோ (Piano)

இது ஒரு மேற்கத்திய இசைக்கருவியாகும் ஆனால்,தற்காலத்தில்'பியானோ' கீழைத்தேய நாடுகளின் மிகப் பிரபலமான வாத்தியக் கருவியாக விளங்குகின்றது. 'பியானோ' என இதனை மிகச் சுருக்கமாக அழைத்தாலும் இதன் உண்மையான பெயர் பியானோ ஃபோட்டே (Piano Forte) என்பதாகும்.பியானோவின் பிறப்பிடம் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. புராதன யுகத்தில் கத்தோலிக்க தேவாலயங்களில் இறைவனை துதித்துப் பாடும் பாடல்களை பாடப் பயன்படுத்தப்பட்ட பைப் ஓர்கன் (Pipe Organ) என்ற கருவியை அடிப்படையாகக் கொண்டு பின்னர் இந்த பியானோ வந்ததாக ஒரு கருத்து நிலவுகின்றது. 'பியானோ' 1698 இல் உருவாக்கப்பட்டதாக சிலர் கருதுகின்றனர். பியானோவின் உட்பகுதியில் இசைக்கருவியின் தந்தியில் அதிர்வு ஏற்படுவதன் மூலம் நாதம் உருவாவதாக ஒரு கருத்து நிலவுகிறது. எனினும், ஸ்வரக்கட்டைகள் (Key Board) உடன் கூடிய பியானோவானது ஸ்வரக்கட்டைகளைக் கொண்ட வாத்தியக் கருவி வகையைச் சார்ந்ததுதான் என பொதுவானதொரு கருத்து நிலவுகின்றது.



## எக்கோடியன் (Accordion)

மேற்கத்திய சங்கீதத்திலும் சாஸ்திரிய சங்கீதத்திலும் இந்த இசைக்கருவி பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. பியானோவை போன்று ஓரளவு அமைந்திருந்தாலும் இதன் ஒரு பக்கத்தில் ஸ்வரக்கட்டைகள் Key Board அமைந்துள்ளன. மறுபக்கம் உரிய அளவு காற்றை வழங்கும் (Bellow) முக்காரப் பகுதி காணப்படுகின்றது. ஐரோப்பாவில் பெர்லின் நகரில் வாழ்ந்த பெரெடிரிச் பிரஷ்மான் என்பவரால் 1822 இல் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டதே இந்த 'எக்கோடியன்' என கூறப்படுகின்றது. 1829 ஆஸ்திரியா (Austria) நாட்டின் தலைநகர் வியன்னாவில் சிரில் டேமியன் என்பவரால் 'எக்கோடியன்' வடிவமைக்கப்பட்டு அதற்கு அனுமதிப் பத்திரமும் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதில் இடது கையால் இயக்கும் வகையில் ஸ்வரக்கட்டைகள் மற்றும் வலது கையால் இயக்கும் வகையில் காற்றை வழங்கும் முக்காரப் பகுதியும் காணப்படுகின்றன. எக்கோடியனை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியது ஆங்கிலேயர்களே.



## சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்




பொதுவாக தமிழில் 'சுருதிப்பெட்டி' என அழைக்கப்படும் இந்த இசைக் கருவியை 'சர்ப்பினா' என்றும் அழைப்பர். இது இந்தியாவில் பிறந்த வாத்தியக் கருவியாக கருதப்படு கிறது. இந்திய கர்நாடக சங்கீதத்திற்கும் இந்த சுருதிப் பெட்டிக்குமிடையே மிக நெருக்கமான தொடர்பு உள்ளது. இந்த இசைக்கருவியை இந்திய இசை வல்லுனர்கள் அதிகமாகப் பயன்படுத்துவது வழக்கம். 'மின் ஓகன்' உருவாவதற்கு முன் ஓரங்க இசை விருந்தின்போது சுருதிப் பெட்டியையே பெரிதும் பயன்படுத்தினர். எனினும், மின் ஓகன் பயன்பாட்டிற்கு வந்த பின் சுருதிப்பெட்டியின் பாவனை படிப்படியாகக் குறைவடைந்து விட்டது.



## மெலோடிக்கா (Melodica)

வாயால் ஊதுவதன் மூலம் இசைக்கப்படும் ஒரு கருவி இது. ஒரு வர்த்தகப் பெயரின் காரணமாகவே இக்கருவிக்கு'மெலோடிக்கா' எனும் பெயர் வந்தது. 1950 களில் ஹோனர் கம்பனி (Hohner Company) எனும் வர்த்தக நிறுவனம் 'மெலோடிக்கா' எனும் வர்த்தகப் பெயரில் இந்த இசைக்கருவியை அறிமுகப்படுத்தியது.மெலோடிக்கா இரு வகைப்படும். அதில் ஒரு வகையானது இரு வரிசையைக் கொண்டு காணப்படும். அதில் வெள்ளை நிற ஸ்வரக்கட்டையானது ச, ரி, க, ம, ப, த, நி எனும் ஏழு ஸ்வரங்களை இசைப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. கோமள மற்றும் தீவ்ர ஸ்வரங்களை இசைப்பதற்காக கறுப்பு நிற ஸ்வரக்கட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மெலோடிக்காவை இசைப்பதென்பது சற்றுக் கடினமான செயல்தான்.

மற்ற வகையான மெலோடிக்காவானது பியானோவைப் போன்ற ஸ்வர வரிசையை கொண்டதாகும். அது அளவில் பெரியதல்ல. ஓரளவு சிறியதே. ஆசிய நாடுகளில்



'மெலோடிக்கா' மிகப் பிரபலமானதொரு இசைக்கருவியாகும். இலங்கையில் பாடசாலை இசைக்குழுவினரால் இக்கருவி பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

## ஓகன் (Organ)

ஸ்வரக்கட்டைகளைக் கொண்ட இசைக் கருவிகளில் மிகப் பழைமையான வாத்தியக் கருவியாக இதனைக் கருதுகின்றனர். கி.பி 15 ஆம் நூற்றாண்டில் கால்களின் உதவியுடன் நாதத்தின் அளவினை கூட்டிக் குறைக்கும் இசைக்கருவியாக (Pedal Keyboard) இது இருந்தது. பின்னர் சில தசாப்தங்களுக்கு முன்பிருந்து மின் ஓகனாக மின்சாரத்தில் இயங்கும் வகையில் (Electric Key-board) வளர்ச்சி அடைந்துள்ளது. தற்கால இன்னிசை விருந்துகளில் மின்சார ஓகனானது மிக அத்தியாவசிய வாத்தியக் கருவியாகும். பாடல் நிகழ்வுகளில் வேறு எந்தவொரு இசைக்கருவியும் இல்லாமல் இந்த மின் ஓகனை மாத்திரம் பயன்படுத்தி இசை நிகழ்ச்சிகளை நடத்தமுடியும். ஆரம்பகாலம் முதல் இந்த இசைக்கருவியை கிறிஸ்தவ தேவாலயங்கள் தமது ஆராதனைகளுக்காக பயன்படுத்தி வந்தன. இன்றும் பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களில் இந்த இசைக்கருவி பயன்படுத்தப்படுகின்றது.



இரஞ்சித் ஜெயகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலையம்

ஆட்சிமுறையில் குடியரசு நாடாக விளங்கும் புருண்டி, கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றாகும். இதன் வட எல்லையில் ருவண்டாவும் தெற்கிலும் கிழக்கிலும் தன்சானியாவும் மேற்கில் கொங்கோ ஜனநாயக குடியரசும் எல்லைகளாக அமைந்துள்ளன. புருண்டி நாடானது, 17 மாவட்டங்களையும் 117 தொகுதிகளையும் 2638 குடியேற்றக் கிராமங்களையும் கொண்டது.

வெப்பமான காலநிலையைக் கொண்ட இந் நாட்டின் தரைத்தோற்றத்தைப் பொறுத்தவரையில், மேற்குப் பிரதேசம் சமவெளிகளாகவும் கிழக்குப் பிரதேசம் மலைகள் நிறைந்த உயர் நிலமாகவும் கிழக்கை அண்மித்த பிரதேசங்கள் பள்ளத்தாக்கைக் கொண்டதாகவும் என மூன்று பிரதான தரைத்தோற்ற வேறுபாடுகளையும் அதற்கேற்ற காலநிலை வேறுபாடுகளையும் கொண்டு விளங்குகின்றது.








## மக்களும் மதமும்

புருண்டி நாட்டின் மொத்த சனத்தொகையில் 85% மானோர் ஆபிரிக்க பழைமைக் கோத்திரத்தாரின் ஒரு பகுதியினரான 'பயுட்டு' இன மக்களாவர். ஏனையோர் புராதன ஆபிரிக்க மொழிகளில் ஒன்றாகிய 'டுட்ஸி' மொழி பேசும் 'டுட்ஸி' மக்களும் 'டீவா' இன மக்களுமாவர்.

அவர்களின் முக்கிய மதங்களாக ரோமன் கத்தோலிக்கம், இஸ்லாம், புரட்டஸ்தாந்து மற்றும் சுதேச மதங்களும் விளங்குகின்றன.





## வரலாறு

'பிக்மொய்ட்' வேடுவர்களான 'டீவா' இன மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இங்கு ஆரம்பக்குடிகளாக வாழ்ந்து வந்ததாக தொல்பொருள் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். எனினும், அதன்பின் 5,000 வருடங்களில் பண்டு மொழி பேசும் 'பயுட்டு' மக்கள் மத்திய ஆபிரிக்காவின் மலைகளை அண்டிய பிரதேசங்களில் இருந்து குடி பெயர்ந்து, இன்றைய புருண்டி பிரதேசங்களில் குடியேறினர்.

புருண்டி நாட்டின் முதலாவது மொழியாக பண்டுமொழி பயன்படுத்தப்பட்டது. டுட்ஸி மற்றும் பயுட்டு கோத்திரத்தார்கள் குடியேற்றங்களை நிறுவிய கையுடன் புருண்டி அரசின் நிலப்பரப்பு

| | |
|---|---|
| தலைநகர் | : புஜும்புரா |
| பெரிய நகர் | : புஜும்புரா |
| அரச கரும மொழி | : கிருண்டி, பிரெஞ்ச், ஸ்வாஹிலி. |
| அரசு | : குடியரசு |
| ஜனாதிபதி | : பயர் நுகுருன்சிசா |
| மொத்த நிலப்பரப்பு | : 27,830 சதுர கிலோமீற்றர். (இதில் 7.8% நன்னீர்த்தேக்கங்களாகும்) |
| நாணயம் | : புருண்டி பிராங்க் |
| சர்வதேச தொலைத்தொடர்பு இலக்கம் | : +257 |

17 ஆம் நூற்றாண்டு வரை விரிவடைந்து சென்றது.

இன்று இவர்களில் விவசாயத்தில் ஈடுபடுபவர்கள் 'பயுட்டு' என்றும் விலங்கு வேளாண்மையில் ஈடுபடுபவர்கள் 'டுட்ஸி' என்றும் இரு இனக்குழுக்களாக, இரு வேறு கலாசாரத்தைப் பிரதிபலிக்கக் கூடியவர்களாக மாறியுள்ளனர். 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் டுட்ஸி வம்சத்தினர் புருண்டி நாட்டின் ஆதிக்கத்தை தமதாக்கிக் கொண்டனர். அதன்படி, இந்த நாடு 19 ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு ஆட்சியாளர்களால் ஆளப்பட்டு வந்தது.

1899 இல் புருண்டி ராசதானி ஜேர்மனியினால் கைப்பற்றப்பட்டு, அவர்களின் குடியேற்ற நாடாக மாறியது. பின்னர் முதலாவது உலக யுத்தத்தில் ஜேர்மனியின் தோல்வியுடன் புருண்டி நாட்டின் ஆட்சி பெல்ஜியம் நாட்டின் கைகளுக்கு மாறியது. 1924 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதி இது உத்தியோகபூர்வமாக பெல்ஜியம் நாட்டின் குடியேற்ற நாடாக உருவானது. அங்கு ருவண்டாவும்




புருண்டியும் இணைக்கப்பட்டு, ருவண்டா-உருண்டி என புதிய நாமம் சூட்டப்பட்ட நாடாகியது. இரண்டாம் உலக மகா யுத்த நேரத்தில் ருவண்டா-உருண்டி பிரதேசம் பெல்ஜியம் நாட்டின் பரிபாலனத்தின் கீழ் ஐக்கிய நாடுகளின் தற்காலிக நிலப்பிரதேசமாக மாறியது. 1948 இல் அவர்கள் பெல்ஜியத்திடம் அரசியல் கட்சி ஒன்றை அமைப்பதற்கான அனுமதியைப் பெற்றனர்.

இதேவேளை, புருண்டியின் ஆட்சியாளரான நான்காம் முவாமி முவம்பட்சா, 1959 ஜனவரி 20 ஆம் திகதி ருவண்டா-உருண்டி ஐக்கிய அரசைக் கலைத்து, ருவண்டாவை புருண்டி நாட்டிலிருந்து பிரிந்த பிரதேசமாகப் பிரகடனப்படுத்தும்படி பெல்ஜியத்திடம் கேட்டுக்கொண்டார். அதன்பின், ஆறு மாதங்களில் அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து ருவண்டாவை புருண்டி பிரதேசத்தில் இருந்து வேறுபடுத்தி, தனி புருண்டி நாட்டை ஐரோப்பாவிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கான செயல்களில் ஈடுபட்டன. அதன் விளைவாக 1962 ஜூலை 1ஆம் திகதி புருண்டி பிரதேசம் ருவண்டா-உருண்டி ஐக்கிய அரசில் இருந்து நீங்கி, நான்காம் முவாமி முவம்பட்சா அரசனின் கீழ் சுதந்திர தேசமாகியது.

## பொருளாதாரம்

ஆபிரிக்கா கண்டத்தின் மிகச்சிறிய நாடுகளில் ஒன்றான புருண்டி, வறிய



நாடாகவும் விளங்குகின்றது. உற்பத்தித் துறையில் பெரிதும் முன்னேறாத நாடாகும். அபிவிருத்தி அடையாத போக்குவரத்து கட்டமைப்புகளும் கடலில் இருந்து வெகு தூரத்தில் அமைந்திருக்கும் அதன் நிலையமும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை வரையறுத்துள்ளன. புருண்டியின் பொருளாதாரம் முற்றிலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. விலங்கு வேளாண்மையில் மக்கள் அதிக ஈடுபாடு கொண்டுள்ளதோடு, போஞ்சி, மரவள்ளி, சோளம், வாழை முதலிய பயிர்ச்செய்கைகளில் பெரிதும் ஈடுபடுகின்றனர்.

இந்நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருளான கோப்பி, அவர்களின் பொருளாதாரத்தில் 80% ஐ பூர்த்தி செய்கின்றது. அதேபோல், பருத்தி, தேயிலை மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியும் இந்நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.


கைத்தொழில் துறையைப் பொறுத்தவரையில் உணவு, பான வகை, ஆடை மற்றும் பாதணிகள் உற்பத்தியும் சிறிய அளவில் மேற்கொள்ளப்படுவதோடு, நிக்கல், யுரேனியம் மற்றும் ஏனைய உலோகங்களும் சிறிதளவில் அகழ்ந்தெடுக்கப்படுகின்றன. புருண்டி நாட்டின் பிரதான வர்த்தகத் தொடர்புகள் ஐரோப்பிய யூனியன் சமூகத்துடனேயே நடைபெறுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாஸ்டர் வாழ்ந்த வீடு

# இரசாயனவியலாளர் லூயி பாஸ்டர்



காற்றில் இருக்கும் பல்வேறு நுண்ணுயிர்கள் பற்றி பலதரப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்ட லூயி பாஸ்டர் (Louis Pasteur), பக்றீரியா விஞ்ஞானத்தில் (Bacteriology) புதிய பல கண்டுபிடிப்புகளை மேற்கொண்டார். இரசாயனவியலாளராகத் தனது அறிவியல் பயணத்தைத் தொடங்கிய இவர் பின்னர் பாஸ்டராக்கம், விசர் நாய்க் கடிக்கான தடுப்பூசி என பல கண்டுபிடிப்புகளினால் உலகப் புகழ் பெற்றார்.



## ஆரம்ப காலம்

லூயி பாஸ்டர், 1822 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டில் டோல் (Dole) என்ற சிறு கிராமத்தில் பிறந்தார். அவரின் தந்தை பெயர் ஜோசப் ஜீன் பாஸ்டர். தாய் எதியா நெயில். படைவீரரான ஜோசப், தன் மகன் ஆசிரியராக வரவேண்டுமென்று விரும்பினார். லூயி பாஸ்டர் தனது ஆரம்பக் கல்வியை அப்ரோய் (Abroi) நகரப் பாடசாலையொன்றில் கற்றார். பின்னர் பெரிஸ் நகரின் ஈகோல் பாடசாலையில் படிப்பை மேற்கொண்டார். அங்கிருந்து மீண்டும் அப்ரோய் நகருக்கு திரும்பி, அங்கிருந்த ஜோபன்சன் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். அப்போதுதான் அவருக்கு இரசாயனவியலில் ஆர்வம் ஏற்பட்டது.

ஈகோல் பாடசாலையில் பாஸ்டர் மாணவராக இருந்தபோது பேராசிரியர் லோரெண்ட் என்பவருக்குக் கீழ் ஆய்வு கூட உதவியாளராகப் பணியாற்றினார். அப்போது டார்ட்டரிக் அமிலப் படிகங்களைக் (Tartaric acid crystals) கூர்ந்து ஆய்வு செய்ததோடு, நுண்ணுயிர்களின் உற்பத்தி தொடர்பாகவும் பண்டங்கள் நொதித்துப் போவதற்கான கரைசல் பற்றிய ஆய்விலும் அவர் ஈடுபட்டார்.

## திருமணம்

1848 ஆம் ஆண்டில் ஸ்ட்ராஸ்போர்க் பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் பேராசிரியராக கடமையாற்றினார். அங்கு தனது வாழ்க்கைத் துணைவியான மேரி லோரண்டைச் சந்தித்தார். 1849 இல் இவர்கள் திருமண பந்தத்தில் இணைந்தனர்.

அவரது வாழ்க்கைத் துணைவி மேரியும் அறிவியல் ஆய்வில் மிகுந்த ஆர்வம் உடையவராக விளங்கினார். எனவே, இருவரும் இணைந்து பல்வேறு அறிவியல் பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டனர்.


கல்லறை

## கண்டுபிடிப்புகள்

சில பொருட்கள் தமது தொடக்க நிலை அல்லது மூல நிலையிலிருந்து மாறுவதற்கு நொதிப்புத் தன்மை காரணமாக விளங்குகிறது. இந்தவகையில் திராட்சையிலிருந்து 'வைன்' தயாராவதற்கும் பால் புளித்துப் போவதற்கும் நொதிப்புத் தன்மையே காரணம். இந்நொதிப்புத் தன்மை எத்தகைய நிலைமைகளில் உருவாகிறது என்பது தொடர்பில் பாஸ்டர் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொண்டு, நொதிப்புத்தன்மைக்கான நுண்ணுயிர்க் கொள்கையை (Germ theory) வெளியிட்டார். பொருள்களில் நொதிப்புத் தன்மையினால் விளையும் எல்லா மாற்றங்களுக்கும் காற்றில் இருக்கும் பல வகையான நுண்ணுயிர்களே காரணம் என்றும் அவற்றை நுண்ணோக்கிகள் வாயிலாக மட்டுமே காண இயலும் என்றும் அந்நுண்ணுயிரிகளை வெப்பத்தினால் கட்டுப்படுத்த முடியும் என்ற நுண்ணுயிர்க்கொள்கைக் கூறுகளை அவர் முன்வைத்தார். இக்கொள்கையின் அடிப்படையில் பாஸ்டராக்கம் (Pasteurisation) என்ற முறை அறிமுகமானது. பாலைக் கெட்டுப்போகாமல் பதப்படுத்துவதற்கு இன்றும் இம்முறையே பின்பற்றப்பட்டு வருவதை நாம் அறிவோம். இவற்றுக்காக பாஸ்டர் பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றார்.



விசர் நாய்க்கடி பாதிப்பு


பால் பாஸ்டராக்கம்

அடுத்து பட்டுப் புழுக்களைத் தாக்கிய நுண்ணுயிரிகளைக் கண்டுபிடிக்கும் ஆய்வில் பாஸ்டர் ஈடுபட்டார். பட்டுப்புழுக்களைத் தாக்கிய நோய்க்கான காரணத்தினை அறிந்தார். இதனால், பிரான்ஸ் நாட்டில் மட்டுமல்லாமல் ஐரோப்பா முழுவதும் பட்டுத்தொழில் அழியாமல் காப்பாற்றப்பட்டது.

நுண்ணுயிர்கள் மனித உடலில் மாற்றங்கள் பலவற்றை ஏற்படுத்தக்கூடியவை என்ற உண்மையை வெளிப்படுத்தினார். மருத்துவரின் கைகள், உடைகள், அறுவை சிகிச்சைக் கருவிகள் [illegible] நுண்ணுயிரழிவாக்கம் (Sterilization) செய்யப்பெறாமல் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படக் கூடாது என்றும் மீறிச் செய்யப்படின், நோயாளியின் குருதியில் ஏராளமான நுண்ணுயிர்கள் கலந்து நிலைமை மோசமாகுமே தவிர, நோயிலிருந்து அவருக்கு விடுதலை கிடைக்காது என்ற உண்மையை பாஸ்டர் உலகுக்கு வெளிப்படுத்தினார். எனவே, அறுவை சிகிச்சைக் கருவிகளை புரை எதிர்ப்புக் கரைசல் (Anti-septic solution) அல்லது கொதி நீரில் அவித்த பின்னர் எடுத்துப் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். பாஸ்டரின் இந்த நுண்ணுயிரழிவாக்க முறையால் பல நோயாளிகளின் உயிர்கள் காக்கப்பட்டன.

அவ்வாறே, கால்நடைகளுக்குப் பரவும் அடைப்பான் (Anthrax) நோய் பற்றிய அவரது ஆய்வும் அந்நோய் பரவாமல் தடுக்க அவர் கண்ட வழிமுறையும் அவரை உலகளவில் பேச வைத்தன. லூயி பாஸ்டரின் மற்றுமொரு மாபெரும் கண்டுபிடிப்பாகக் கருதப்படுவது விசர் நாய்க்கடிக்கான (Rabies) சிகிச்சை முறையாகும்.


இவ்வாறு பல்வேறு சிகிச்சை முறைகளின் கண்டுபிடிப்புகளுக்குக் காரணமான லூயி பாஸ்டர், திசு அழுகல் (Gangrene), குருதி விஷமாதல் (Blood-Poisoning), பிறந்த குழந்தைக்கு வரும் காய்ச்சல் ஆகிய நோய்களைப் பற்றியும் ஆய்வு நடத்தினார்.


நுண்ணுயிரழிவாக்கம் செய்யப்படல்

## இறுதிக் காலம்

பெரிஸில் தான் வாழ்ந்து வந்த வீடுதான் இவரின் ஆய்வகமாகவும் விளங்கியது. அதுவே, இன்று பாஸ்டர் நூதனசாலையாகவும் மாற்றம் பெற்றுள்ளது. பாஸ்டர் இரசாயனவியல் உலகுக்குச் செய்த மாபெரும் சேவையைப் பாராட்டி ரஷ்யப் பேரரசர் ஒருவர் அவருக்கு வைரப் பதக்கம் அளித்துப் பாராட்டியதோடு, அறிவியல் ஆய்வு மையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு பொருளுதவியும் அளித்தார். லூயி பாஸ்டர் என்ற இந்த மாபெரும் அறிவியலாளர் 1895 ஆண்டு செப்டெம்பர் 27 ஆம் திகதி இவ்வுலகை நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அனைவரது கவனத்தையும் ஈர்த்

**உலக வல்லரசுகளில் ஒன்றாகிய ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் கடந்த இருவாரங்களுக்கு முன் நடைபெற்று முடிந்துள்ளது. இன்றைய உலகம் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கும் இவ்வேளையில், ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளமை உலகின் கவனத்தை ஈர்த்துள்ளதோடு, பல எதிர்பார்ப்புகளையும் தோற்றுவித்துள்ளது.**

**எனவே, அமெரிக்க அரசியல் யாப்பைப் பற்றியும் ஜனாதிபதித் தேர்தல் பற்றியும் அதில் ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படும் முறை பற்றியும் சுருக்கமாக பார்ப்போம்.**

## ஐக்கிய அமெரிக்காவின் வரலாறு

செவ்விந்தியர்களதும் பூர்வீக அமெரிக்க குடிகளதும் சுதந்திர பூமியாய் திகழ்ந்த அமெரிக்காவில் 1490 ஆம் ஆண்டு கிறிஸ்டோபர் கொலம்பஸ் எனும் இத்தாலியர் ஸ்பெய்ன் தேசத்தின் ஆதரவுடன் மேற்கிந்தியத் தீவுகளில் கால் வைத்ததை அடுத்து, ஐரோப்பியர்களின் ஆதிக்கம் சிறுகச் சிறுக அமெரிக்காவில வேரூன்றத் தொடங்கியது. 1565 இல் ஃப்ளோரிடாவையும் 1600 இல் டெக்சாஸ், நியூமெக்ஸிகோ, கெலிஃபோர்னியா ஆகிய குடியேற்றங்களையும் ஸ்பானியர் அமெரிக்காவில் நிறுவினர்.

எனினும், ஐரோப்பாவில் ஸ்பானியரின் வீழ்ச்சியின் பின், பிரித்தானியர் அமெரிக்காவில் வேரூன்றத் தொடங்கினர். ஆங்கிலேயர் 1607 இல் ஜேம்ஸ் டவுனையும் 1620 இல் யாத்திரைப் பெரியார்கள் (Pilgrim Fathers) 'மசாசுசெட்ஸ்' எனும் குடியேற்றத்தையும் நிறுவினர். பின்னர், பிரித்தானியாவின் குடியேற்றங்கள் அதிகரித்து ஈற்றில் மசாசுசெட்ஸ், ரோட் ஐலன்ட், கனெக்டிக்கட், நியூ ஜேர்சி, டெலாவெயார், மேரிலேண்ட், வேர்ஜீனியா, நியூஹெம்ப்ஷயர், நியூயோர்க், பென்சில்வேனியா, வட கரோலினா, தென் கரோலினா, ஃப்ளோரிடா என 13 மாநிலங்கள் உருவாகின. ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகளாக பிரித்தானியாவின் மாநிலங்களாக இருந்த இவை, பிரித்தானியாவின் சில நடவடிக்கைகள் காரணமாக ஜோர்ஜ் வொஷிங்டன் தலைமையில் சுதந்திரத்திற்காகப் போராடின. அதன் விளைவாக 1776, ஜூலை மாதம் 14 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்கா சுதந்திர அரசாக உருவானது.

## தரைத்தோற்றவியல்

இதன் வடக்கில் கனடாவும் தெற்கில் மெக்ஸிக்கோவும் மேற்கே பசுபிக் சமுத்திரமும் கிழக்கே அட்லாண்டிக் சமுத்திரமும் எல்லைகளாக உள்ளன.

ஐக்கிய அமெரிக்கா வடக்கு-தெற்காக 2575 கி.மீற்றர் தூரத்தையும் கிழக்கு-மேற்காக 4500 கி.மீற்றர் தூரத்தையும் கொண்ட ஒரு பாரிய நிலப் பரப்பை உடைய நாடாகும். இங்கு கனிய வளங்களும் வளம் நிறைந்த விவசாய நிலங்களும் நதி வளங்களும் கடல் வளங்களும் நிறைந்து காணப்படுகின்றன. சுதந்திரமடைந்ததில் இருந்து 1914 ஆம் ஆண்டு 1 ஆம் உலக யுத்தம் வரை அமெரிக்கா கடைப்பிடித்த உள்நாட்டு-வெளிநாட்டுக் கொள்கைகள் அதனை வல்லரசாக மாற்ற உதவின. 1820 இல் 'மன்ரோ' பிரகடனம் மூலம் வெளிநாடுகள் அமெரிக்க விடயத்தில் தலையிடுவதைத் தவிர்த்துக் கொண்டமையினால் யுத்தங்களில் ஈடுபடாது உள்நாட்டில் சகல துறைகளிலும் தன்னை அபிவிருத்தி செய்து கொண்டு முன்னேறியது.

முதலாம், இரண்டாம் உலகப் போரில் பல வெற்றிகளை ஈட்டியதன் மூலம் அமெரிக்கா முதன்மை வல்லரசாக முன்னேறியது.

அமெரிக்காவுக்கு மாற்றாக மற்றொரு வல்லரசாக முன்னேறிய ரஷ்யாவுடன் 5 தசாப்தங்களாக பனிப்போரில் ஈடுபட்டாலும் ஈற்றில் 1991 இல் ரஷ்யாவின் வீழ்ச்சியுடன் தனது ஆதிக்கத்தை உலக அரங்கில் மேலும் அதிகரித்துக் கொண்டது.

## அமெரிக்க ஜனாதிபதிகள்



01. ஜோர்ஜ் வொஷிங்டன் - (1732-1799) ஆட்சிக்காலம் 1789-1797. அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி
02. ஜோன் அடம்ஸ் - (1735-1826) ஆட்சிக்காலம் 1797-1801. அமெரிக்காவின் இரண்டாவது ஜனாதிபதி.
03. தோமஸ் ஜெபர்சன் (1743-1826) ஆட்சிக்காலம் 1801-1809. ஜனநாயக குடியரசுக் கட்சியை தாபித்தவர் இவரே.
04. ஜேம்ஸ் மெடிசன் (1751-1836) ஆட்சிக்காலம் 1809-1817. அமெரிக்க பெடரல் (Federal) அரசியலமைப்பின் தந்தை என போற்றப்படுபவர்.
05. ஜேம்ஸ் மொன்ரோ - (1758-1831) ஆட்சிக்காலம் 1817-1825. பிரசித்தி பெற்ற 'மொன்ரோ' தலையிடா கொள்கையைக் கொண்டுவந்தவர். (1823)
06. ஜோன் கியுன்சி அடம்ஸ் - (1767-1848) ஆட்சிக்காலம் 1825-1829. ஐரோப்பிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து மொன்ரோ கொள்கையை நடைமுறைப்படுத்தியவர்.
07. அன்ரூ ஜெக்சன் - (1767-1845) ஆட்சிக்காலம் 1829-1837.
08. மார்ட்டின் வென் பியூரன் - (1782-1862) ஆட்சிக்காலம் 1837-1841.
09. வில்லியம் ஹென்ரி ஹெரிசன் - (1773-1841) ஆட்சிக்காலம் 1841 இல் ஒரு மாதமே அதிபராக இருந்து மரணமானார்.
10. ஜோன் டெய்லர் - ஆட்சிக்காலம் 1841-1845.
11. ஜேம்ஸ் போக் - (1795-1849) ஆட்சிக்காலம் 1845-1849.
12. ஸெச்சரி டெய்லர் - (1785-1850) ஆட்சிக்காலம் 1849-1850. 1 வருடம் 4 மாத ஆட்சிக்காலத்தின் போது மரணமானார்.
13. மில்லர்ட் ஃபில்மோர் - (1800-74) ஆட்சிக்காலம் 1850-1853
14. பிரேங்ளின் பியர்ஸ் - (1804-1869) ஆட்சிக்காலம் (1853-1857)
15. ஜேம்ஸ் பியூகனன் - (1791-1868) ஆட்சிக்காலம் (1857-1861)
16. ஆபிரஹாம் லிங்கன் - (1809-65) ஆட்சிக்காலம் 1861-1865. உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார். முதன்முதலாக சுட்டுக்கொலை செய்யப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி.
17. அன்ரூ ஜோன்சன் - (1808-1875) ஆட்சிக்காலம் 1865-1869
18. யுலிசெஸ் எஸ்.கிரான்ட் - (1822-1885) ஆட்சிக்காலம் 1869-1877.
19. ரதர் ஃபோர்ட் ஹேய்ஸ் - (1822-1893) ஆட்சிக்காலம் 1877-1881
20. ஜேம்ஸ் கார்ஃபீல்ட் - (1831-1881) ஆட்சிக்காலம் 1881. ஆட்சிக்காலம் முடிவடைய முன் சுட்டுக்கொல்லப்பட்டார்.
21. செஸ்டர் எ.ஆர்த்தர் - (1830-86) ஆட்சிக்காலம் 1881-1885.
22. க்ரோவர் க்ளெவ்லன்ட் - (1837-1908) ஆட்சிக்காலம் 1885 - 1889
23. பெஞ்சமின் ஹெரிசன் - (1833-1901) ஆட்சிக்காலம் 1889-1893
24. க்ரோவர் க்ளெவ்லன்ட் - (1837-1908) ஆட்சிக்காலம் 1893-1897
25. வில்லியம் மெக்கின்லி - (1843-1901) ஆட்சிக்காலம் 1897-1901.
26. தியோடர் ரூஸ்வெல்ட் - (1858-1919) ஆட்சிக்காலம் 1901-1909
27. வில்லியம் ஹாவட் டெஃப்ட் - (1857-1930) ஆட்சிக்காலம் 1909-1913
28. வுட்ரோ வில்சன் - (1856-1924) ஆட்சிக்காலம் 1913-1921. முதலாம் உலகப் போரில் ஈடுபட்டு அமெரிக்காவை வழிநடத்தியவர்.
29. வோரன் ஹார்டிங் - (1865-1923) ஆட்சிக்காலம் 1921-1923. பதவியின்போது காலமானார்.
30. கல்வின் கூலிஜ் - (1872-1933) ஆட்சிக்காலம் 1923-1929.
31. ஹேர்பட் ஹூவர் - (1874-1964) ஆட்சிக்காலம் 1929-1933.
32. பிரேங்ளின் டி.ரூஸ்வெல்ட் - (1882-1945) ஆட்சிக்காலம் 1933-1945. இரண்டாம் உலகப்போரில் அமெரிக்காவை வழிநடத்தியவர்.
33. ஹெரி எஸ்.ட்ரூமன் - (1890-1969) ஆட்சிக்காலம் 1945-1953. ஜப்பான் மீது அணுகுண்டுத் தாக்குதலை அமெரிக்கா நடத்தும்பொழுது ஜனாதிபதியாக இருந்தவர்.
34. டுவைட் டி.ஐசன்ஹோவர் - (1890-1969) ஆட்சிக்காலம் 1953-1960
35. ஜோன் எப்.கென்னடி - (1917-1963) ஆட்சிக்காலம் 1961-1963. அமெரிக்க வரலாற்றில் முதலாவது ரோமன் கத்தோலிக்க ஜனாதிபதி. இவர் காலத்தில் பனிப்போர் உச்சநிலையை அடைந்தது. 1963 இல் இவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.
36. லிண்டன் பி.ஜோன்சன் - (1908-1993) ஆட்சிக்காலம் 1963-1969.
37. ரிச்சர்ட் எம்.நிக்ஸன் - (1913-1994) ஆட்சிக்காலம் 1969-1974. வோட்டர் கேட் ஊழலில் ஈடுபட்டவர்.
38. ஜெரல்ட் ஃபோர்ட் - ஆட்சிக்காலம் 1974-1977
39. ஜிம்மி கார்ட்டர் - ஆட்சிக்காலம் 1977 - 1981
38. ரொனால்ட் ரீகன் - ஆட்சிக்காலம் 1981-1989
40. ஜோர்ஜ் புஷ் - ஆட்சிக்காலம் 1989-1993
41. பில் கிளிண்டன் - ஆட்சிக்காலம் 1993-2001
42. ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்-ஆட்சிக்காலம் 2001-2005
43. ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் -ஆட்சிக்காலம் 2005-2009
44. பராக் ஒபாமா - ஆட்சிக்காலம் 2009 இலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பதவியேற்கவுள்ள ஜனாதிபதியும் உப ஜனாதிபதியும் தத்தமது குடும்பத்தாருடன்



# ரித்த ஜனாதிபதித் தேர்தல்

## இன்றைய ஐக்கிய அமெரிக்கா

உலகின் மிகப்பெரும் சக்தியாக விளங்கும் அதேவேளையில், உலகில் மிக அதிகமான எதிர்ப்புகளையும் சந்திக்கும் நாடு ஐக்கிய அமெரிக்காவாகும்.

| | |
|---|---|
| **தலைநகர்** | **: வொஷிங்டன்** |
| **மொத்த நிலப்பரப்பு** | **: 93,72,614 சதுர கி.மீற்றர்** |
| **மொழி** | **: ஆங்கிலம்** |
| **சமயம்** | **: கிறிஸ்தவம்,யூதம்,இஸ்லாம்** |
| **சுதந்திர தினம்** | **: 04 ஜூலை 1776** |
| **நாணயம்** | **: டொலர்** |
| **தனிநபர் சராசரி வருமானம் (2006)** | **: 43,500 அமெரிக்க டொலர்** |
| **முக்கிய நகரங்கள்** | **: நியூயோர்க், லொஸ் ஏஞ்சல்ஸ்,சிகாகோ, பிலடெல்பியா** |
| **முக்கிய ஆறுகள்** | **: மிஸிஸிப்பி, ரியோ கிரான்டே, அர்கான்சாஸ்,கொலராடோ, ஒஹியோ, கொலம்பியா** |
| **இன்டர் நெட் குறியீடு** | **: US** |
| **சர்வதேச தொலைத்தொடர் இலக்கம்** | **: +1** |

## பொருளாதாரம்

தொழில்நுட்ப ரீதியாக சக்திமிக்க பொருளாதார பின்புலம் கொண்டது. தனியார் தொழில் குழுமங்கள் அதிக செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன.

## ஐக்கிய அமெரிக்காவுக்கு உரித்தான தனிநிலை மண்டலங்கள்(Ootlying Territores)

பியூடோரிக்கோ, குவாம், வட மரியானா தீவு, கொமன்வெல்த்,அமெரிக்கன் சமோவா,பிற பசுபிக் மண்டலங்கள், ஜோன்சன் அடோல், மிட்வே தீவுகள், வேக் தீவுகள் மற்றும் அமெரிக்க வேர்ஜின் தீவுகள்.

## ஐக்கிய அமெரிக்காவின் சனத்தொகை

2007 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 30,11,39,947 பேர் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் பெரும்பான்மையினரான வெள்ளை இன மக்கள் 80.3% ஆகும். கறுப்பின மக்கள் 12.1% ஆகும். ஏனையோர் 7.6% ஆகும்.

மதரீதியாக, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் 52.7%, ரோமன் கத்தோலிக்கர் 26.2, ஏனைய கிறிஸ்தவர்கள் 7.6%, இஸ்லாமியர் 1.9%, யூதர்கள் 1.87 என வாழ்கின்றனர்.

## அமெரிக்க ஜனாதிபதி தெரிவு

ஜனாதிபதி தேர்தலை அடுத்தே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுவார். இத்தேர்தல் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும். இருப்பினும், இத்தேர்தல் இலங்கையில் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கு நடாத்தப்படும் தேர்தலைப் போன்று நடைபெறுவதில்லை. ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பது ஒரு தேர்தல் கல்லூரியினாலாகும். பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடையும் ஆண்டின் நொவெம்பர் மாதம் முதல் வாரத்தில் இத்தேர்தல் நடைபெறும்.

## தேர்தல் கல்லூரி

அமெரிக்க அரசியல் யாப்பைத் தயாரித்தவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் நேரடியாக வாக்களிப்பதை விரும்பவில்லை. எனவே, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கல்லூரியொன்றை அமைத்தனர். நாட்டின் சட்ட வாக்கத்துறையான காங்கிரஸினது இரு சபைகளினதும் அங்கத்தவர்களைக் கொண்டதாக இக்கழகம் காணப்படுகின்றது.

தற்போது, இக்கழகத்தில் 538 உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இக்கல்லூரி அங்கத்தவர்களை, வாக்களர்கள்தெரிவு செய்வர். 4 ஆண்டுகளைக் கொண்ட பதவிக் காலத்திற்கான ஜனாதிபதி இக்கல்லூரியாலேயே தேர்ந்தெடுக்கப்படுவார்.

ஆனால், நடைமுறையில் இவ் ஒழுங்குமுறை பயனற்றதாகிவிட்டது. ஏனெனில், அங்கு ஜனநாயக கட்சி, குடியரசுக் கட்சி ஆகிய இரு கட்சிகளுமே செல்வாக்குப் பெற்றுள்ளன. வேறு பல கட்சிகள் அமெரிக்காவில் இருந்தாலும் அவை மக்களின் செல்வாக்கைப் பெறவில்லை. எனவே, ஒரு ஜனாதிபதித் தேர்தலில் வேறுகட்சிகளின் சார்பில் எத்தனை பேர் போட்டியிட்டாலும் இவ்விரு கட்சிகளில் ஏதாவதொரு கட்சியிலிருந்தே மாறி மாறி ஜனாதிபதி தெரிவாவார்.

538 உறுப்பினர்களைக் கொண்ட இக்கல்லூரியில், குறைந்தபட்சம் 270 உறுப்பினர்களின் ஆதரவையாவது ஒருவர் பெற்றால்தான் அவர் ஜனாதிபதியாக முடியும். ஏதாவது காரணிகளால் தேர்தல் கல்லூரியில் 270 வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியாதவிடத்து, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு காங்கிரஸுக்கு வழங்கப்படும். அதனை அடுத்து தேர்தல் கல்லூரியில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற மூவரில் ஒருவரை பெரும்பான்மை வாக்குகளின் மூலம் காங்கிரஸ் தேர்ந்தெடுக்கும்.

**(18ஆம் பக்கம் பார்க்க)**





ஜோன் மெக்கெய்ன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி



கல்வி ஒரு வெகுமதி
ஏற்றுக்கொள்ளுங்கள்
கல்வி ஒரு போராட்டம்
வென்று காட்டுங்கள்
கல்வி ஒரு கடமை
நிறைவேற்றுங்கள்
கல்வி ஒரு சந்தர்ப்பம்
நழுவ விடாதீர்கள்
கல்வி ஒரு விளையாட்டு
ஈடுபடுங்கள்
கல்வி ஒரு புதிர்
விடுவியுங்கள்
கல்வி ஒரு பயணம்
சென்று முடியுங்கள்

எஸ்.சிவகுமார், தெலம்புகஸ் மு.வித்.,

## இன்றியமையா இரண்டு

★ மனிதனுடன் என்றும் நிலைக்காத இரண்டு
- ஆற்றலும், இளமையும்

★ மனிதனுடன் சேர்ந்து வளரும் இரண்டு
- அறிவும், செயல்களும்

★ சகலருக்கும் பயனளிக்கும் இரண்டு
- நற்குணம், தயாளகுணம்

★ சகலரும் வெறுக்கும் இரண்டு
- பெருமை, அகங்காரம்


★ நாம் விரும்ப வேண்டிய இரண்டு
- சுபீட்சம், ஆரோக்கியம்

★ அனைத்து நாடுகளிலும் நிலவ வேண்டும் என ஆசைப்படும் இரண்டு
- சமாதானம், பாதுகாப்பு

★ இறைவன் எமக்களிக்க வேண்டும் என அவாவுறும் இரண்டு - நேர்வழி, நிம்மதி

சுபைர் சஹானாஸ்,
டி.பி.ஜாயா வித்., கிண்ணியா-03.

# யார் அரசன்?



முன்னொரு காலத்தில் வருணன் என்ற அரசன் தன் நாட்டை சீரும் சிறப்புமாக ஆட்சி செய்து வந்தான். அவனின் ஆட்சியின் கீழ் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். ஆனாலும், அவனின் ஆட்சிக் காலம் நிறைவு பெறும் தருவாயில் அவன் தன் ஐந்து புத்திரர்களையும் அழைத்து ''புத்திரர்களே,இனி என் ஆட்சி நிறைவு பெறப் போகிறது. அடுத்த மன்னனாக உங்களில் ஒருவரை தேர்ந்தெடுக்க விரும்புகிறேன். உங்கள் திறமையை சோதனை செய்ய் உங்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு விதை தருகின்றேன். விதைகளை நீங்கள் நம் அரண்மனை பூந்தோட்டத்தில் நடவேண்டும். இரண்டு வாரங்களில் அவற்றை கண்காணிக்க வருவேன். அப்பொழுது உங்களில் ஒருவரை இந்நாட்டு அரசனாக்குவேன்'' எனக் கூறினான்.




இரு வாரத்தின் பின் அரசன் விதைகளை பார்வையிட பூங்காவிற்குச் சென்றான். விதைகளின் வளர்ச்சிகள் மிக பிரமாதமாக இருந்தன. ஆனாலும், இளைய இளவரசரின் விதை மட்டும் எந்த வளர்ச்சியும் அடையவில்லை. இளைய இளவரசன் அரசனிடம் ''தந்தையே இவ்விதைக்கு இயன்ற அளவு பசளையிட்டுப் பராமரித்து வந்தேன். ஆனால், இதில் வளர்ச்சி இல்லை. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

அரசன் அடுத்த நாள் அரசவையைக் கூட்டி ''இந்நாட்டு அரசன் இளைய புத்திரனான முகுந்தன்'' என்று கூறினான்.

அரசவையில் இருந்த மூத்த இளவரசன் எழுந்தான். ''தந்தையே! நீங்கள் கொடுத்த விதைகளை நன்கு பயிரிட்டு செழிப்பாக வளர்த்த எங்கள் நால்வரில் ஒருவரை அரசனாக தேர்ந்தெடுக்காமல் விதையில் ஒரு பயனையும் பெறாத இளையவனை தேர்ந்தெடுத்தது ஏன்?'' என ஆவேசத்துடன் கேட்டான்.

அரசனோ புன்சிரிப்புடன், ''நான் உங்கள் ஐவரிடமும் கொடுத்தது முளைத்திறன் அற்ற விதைகளே. நீங்கள் நால்வரும் ஏமாற்றுக்காரர்கள். முகுந்தன் மட்டுமே நேர்மையானவன் நீங்கள் நால்வரும் அரசனாக வேண்டும் என்ற நோக்கில் வேறு விதைகளை நாட்டினீர்கள். ஆனால், முகுந்தன் மட்டும்தான் உண்மையாக நடந்துள்ளான்'' என்று அமைதியாகக் கூறி முடித்தான். மூத்த இளவரசர்கள் நால்வரும் வெட்கத்தில் தலைகுனிந்தனர்.

வினோ துரைசிங்கம்,
இ/பாலர் இயேசு கன்னியர்
மடம் தேசிய பாட.,

## ஒற்றுமையை வளர்ப்போம்!

வேற்றுமை மறப்போம்
ஒற்றுமையை வளர்ப்போம்
வள மக்கள் நாங்கள்
வாழ்க்கை முழுவதுமே!

சிறுவர்கள் நாங்கள்
சிறிதும் வேற்றுமையின்றி
சிந்தையில் ஒற்றுமையுடன்
சிரித்துக் கைகோர்ப்போம்!

மண்ணின் மைந்தர் நாம்
மண்ணோடு வாழும் வரை
மாறாத ஒற்றுமையுடன்
மாண்புடன் வாழ்ந்திடுவோம்!

நி.ப.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.

## தெரிந்து கொள்ளுங்கள்

| | |
|---|---|
| ★ உலகில் மிகப் பெரிய குகை | - டானா குகை (ஜப்பான்) |
| ★ உலகில் மிகப் பெரிய விலங்கு | - ஆபிரிக்கா யானை |
| ★ உலகில் மிக உயரமான சிலை | - சோல்காகிராட் (ரஷ்யா) |
| ★ உலகில் மிக நீளமான சுவர் | - சீனப் பெருஞ்சுவர் |
| ★ உலகில் மிக உயரமான அணை | - நூரெக் அணை (ரஷ்யா) |
| ★ முதன்முதலில் விண்வெளிக்குச் சென்ற பெண் | - வாலண்டினா தெரஸ்கோவா |
| ★ அலுமினியம் அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடு | - அமெரிக்கா |
| ★ சிங்கப்பூரின் பண்டைய பெயர் | - டெமாசெக் |
| ★ செல்போனைக் கண்டுபிடித்தவர் | - ஜோசப் அஸ்ப்தின் |

தொகுப்பு: கே.ஆர்.எப்.ரிப்கா,
அரக்யால ம.ம.வித்.,

## தண்ணீர் பற்றிய தகவல்கள்



★ சுத்தமான தண்ணீர் ஒரு சிறந்த வளமாகும். இதற்கு ஈடாக எதுவும் கிடையாது.

★ பூமியை நீல வர்ணக்கோள் என்று அழைப்பதற்கு பூமியில் 70 சதவீதமான பகுதி நீரினால் சூழப்பட்டுள்ளமையே காரணமாகும்.

★ பூமியிலுள்ள நீரில் 97.5 சதவீதம் உப்பு நீராகவும் 2.5 சதவீதம் சுத்தமான நீராகவும் காணப்படுகின்றது. சுத்தமான நீர் அண்டார்டிகா பகுதியிலும், கிறீன்லாந்துப் பகுதியிலும் பனிக்கட்டியாக உறைந்துள்ளது.

★ சுத்தமான நீரின் தேவை அன்றாடம் அதிகரித்த வண்ணமே உள்ளது. ஆனால், அதன் விநியோகம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

★ 2025 ஆம் அண்டில் உலக சனத்தொகை 803 கோடியாகவும் 2050 இல் ஆயிரம் முதல் ஆயிரத்து இருநூறு கோடியாகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியாயின் நீரின் தேவை எந்தளவு அதிகரிக்கும் என சற்று எண்ணிப் பாருங்கள்.

★ ஒரு மனிதனது சரீரத்துக்கு தினசரி 2-5 லீற்றர் தண்ணீர் தேவைப்படுகின்றது. மிகத் தாராளமாக உபயோகிப்பதாயின் 200 லீற்றர் தேவைப்படுகின்றது.

எம்.ஏ.அப்துல் அஸீஸ் பாஸாத்,
அல்-ஹாமியா அரபுக் கல்., கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ஃபாத்திமா பாஷிலா,
தரம் - $8^{A}$,
சார்ணியா த.ம.வித்.,
கந்தேகெதர.



மொஹமட் அக்ரம்,
தரம் - $9^{C}$,
ஸாஹிரா தே.கல்.,
புத்தளம்.



கே.ஹரிகரன்,
தரம் - $7^{A}$,
கொட்டகலை த.ம.வித்.,
கொட்டகலை.



எஃப்.ரிக்ஷானா,
தரம் - 12,
அறபா தே.பாட.,
வெலிகமை.




அ.கிரிஜா,
தரம் - 5,
மன்/தூய
ஜோசப்வாஸ்
ம.வித்.,
விடத்தல்தீவு.



எஸ்.தபணியா,
மிலேனியம் கிட்ஸ் நேர்சரி,
பதுளை.



ஆர்.ஏ.எம்.மனாசிர்,
தரம் - $5^{A}$,
அலிகார் ம.வித்.,
கல்-எலிய.



சூரதுல் யமீனா, தரம் - 8,
இலுக்வத்த மு.வித்.,
பிலிமதலாவ.



நிவ்மெல்போட், புசல்லாவையைச் சேர்ந்த மாரிமுத்து-புஸ்பராணி தம்பதிகளின் செல்வப் புதல்வி மோகனா தர்சினி, தனது இரண்டாவது பிறந்த தினத்தை 13.11.2008 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, அண்ணா சஞ்சீவன், அக்கா சுஜித்ரா மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்-ஐ.பிரதீப்)



குருணாகலையைச் சேர்ந்த அலி அக்பர்-ஜெஸ்மியா தம்பதியினரின் செல்வப் புதல்வன் காலித் ஆதிக் அலி, தனது மூன்றாவது பிறந்த நாளை 08.11.2008 அன்று தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்-ஷிஹானா)



விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

அண்மையில் 'Save the Children' நிறுவனத்தின் அனுசரணையில் மாவடிப்பள்ளி கமு/அல்-அஷ்ரப் மகா வித்தியாலயத்தில் 'பொதுச் சொத்தைப் பேணல்' எனும் தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலைவிழாவின் ஓர் அங்கமான சிறுவர் நடன நிகழ்ச்சியொன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

(தகவல்: நிப்றாஸ் மன்சூர் 'விஜய்' இளம் செய்தியாளர்)

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2235

ஏ.எம்.ஆஸாத்,
தரம் - $6^{R}$,
றோயல் கல்லூரி,
கொழும்பு-07.



அங்.இல : 2236

சி.டோசிக்கா,
தரம் - $1^{C}$,
தி/புனித மரியாள் கல்.,
திருகோணமலை.



அங்.இல : 2237

நளீம் ஸாத்,
தரம் - 5,
மடிகே முஸ்லிம் ம.வித்.,
முதுந்துவ.



அங்.இல : 2238

ம.தவராஜா,
தரம் - $12^{(கலை)}$,
ஹாலிஎல த.ம.வித்.,
ஹாலிஎல.



அங்.இல : 2239

எம்.எம்.ஃபைசல்,
தரம் - $10^{B}$,
ஸாஹிரா தே.பா.,
அநுராதபுரம்.



அங்.இல : 2240

ஏ.மலிக்,
தரம் - $2^{B}$,
தூய தோமையர் கல்.,
பண்டாரவளை.



அங்.இல : 2241

சதீலா பர்வின்,
தரம் - 6,
நிக்கவெவ மு.வித்.,
ஹொரவப்பொத்தானை.



அங்.இல : 2242

எஸ்.ருமேஷ்,
தரம் - $11^{I}$,
மல்ஹறுஸ் ஸுல்ஹியா
தே.பா., காலி.



அங்.இல : 2243

எம்.ஆர்.எம்.மஸீன்,
தரம் - $5^{T}$,
ஸாஹிரா ஆ.கல்.,
அக்குறணை.



அங்.இல : 2244

ரி.வினோத்,
தரம் - $7^{B}$,
விஜயரத்தினம் இ.ம.கல்.,
நீர்கொழும்பு.



அங்.இல : 2245

பயாஸ் அஹமட்,
தரம் - 9,
அஸ்.ஸிறாஜ் ம.வித்.,
அக்கரைப்பற்று.



அங்.இல : 2246

ஜொய்சி பிர்னிகா,
தரம் - 9,
அ.மு.க.பாட.,
தலைமன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

අම්මා: දුව අඹ ගෙඩියක් අරගෙන එන්න.
துவ அம்ப கெடியக் அறகென என்ன.
அம்மா: மகள் ஒரு மாங்காய் கொண்டு வாங்க.

දුව: අඹ මොකටද අම්මේ?
அம்ப மொகடத அம்மே?
மகள்: மாங்காய் ஏன் அம்மா?



අම්මා: අඹ කරියක් උයන්න ඕනේ.
அம்ப கறியக் உயண்ண ஓணே.
அம்மா: மாங்காய் கறி சமைக்க வேண்டும்.

දුව: ගැට අඹ ඕනේද?
கெட அம்ப ஓணேத?
மகள்: பிஞ்சு மாங்காய் வேணுமா?

පැහිච්ච අඹ ඕනේද ?
பெஹிச்ச அம்ப ஓணேத?
முற்றிய மாங்காய் வேணுமா?

අම්මා: පැහිච්ච අඹ තමා හොඳ.
பெஹிச்ச அம்ப தமா ஹொந்த.
அம்மா: முற்றிய மாங்காய்தான் நல்லது.

හොඳ පැහිච්ච අඹ ගෙඩියක් ගේන්න.
ஹொந்த பெஹிச்ச அம்ப கெடியக் கேன்ன.
நல்ல முற்றிய மாங்காய் கொண்டு வாங்க.

දුව: අඹ කොහේද තියෙන්නේ?
அம்ப கொஹேத தியென்னே?
மகள்: மாங்காய் எங்கே இருக்கு?

අම්මා: අඹ කූඩයේ තියෙනවා.
அம்ப கூடயே தியெணவா.
அம்மா: மாங்காய் கூடையில் இருக்கு.



දුව: අඹ කූඩය කොහේද තියෙන්නේ?
அம்ப கூடய கொஹேத தியென்னே?
மகள்: மாங்காய் கூடை எங்கே இருக்கு.

අම්මා: අඹ කූඩය ඇඳ යට තියෙනවා.
அம்ப கூடய எந்த யட தியெனவா.
அம்மா: மாங்காய் கூடை கட்டிலுக்குக் கீழ் இருக்கு.

දුව: මේ අඹ හොඳද?
மே அம்ப ஹொந்தத?
மகள்: இந்த மாங்காய் நல்லதா?

අම්මා: මේ අඹ හොඳයි.
மே அம்ப ஹொந்தய்.
அம்மா: இந்த மாங்காய் நல்லது.

මේ අඹ හොඳට පැහිල තියෙනවා.
மே அம்ப ஹொந்தட பெஹிள தியெனவா.
இந்த மாங்காய் நல்லா முற்றி இருக்கு.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: மகள் ஒரு மாங்காய் கொண்டு வாங்க.
දුව අඹ ගෙඩියක් අරගෙන එන්න.

i. மாங்காய் கறி சமைக்க வேண்டும்.
..............................................................................

ii. முற்றிய மாங்காய் நல்லது.
..............................................................................

iii. மாங்காய் கூடையில் இருக்கு.
..............................................................................






'**am**' எனும் துணைவினைச் சொல், நிகழ்கால துணைவினைச் சொல் (Present Tense Auxiliary Verb) என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ளவேண்டும். இதன் இறந்தகால வடிவம் 'was' என்பதாகும். இவற்றை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) I am.
நான் இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) I was.
நான் இருந்தேன். (இறந்தகாலம்)

(அ) I am at home now.
நான் இப்பொழுது வீட்டில் இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) I was at home yesterday.
நான் நேற்று வீட்டில் இருந்தேன். (இறந்தகாலம்)

---

(அ) I am a student now.
நான் இப்பொழுது ஒரு மாணவனாக இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) Earlier I was a student.
முன்னர் நான் ஒரு மாணவனாக இருந்தேன். (இறந்தகாலம்)

(அ) I am in Colombo now.
நான் இப்பொழுது கொழும்பில் இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) I was in Negombo yesterday.
நான் நேற்று நீர்கொழும்பில் இருந்தேன். (இறந்தகாலம்)

---

(அ) I am happy now.
நான் இப்பொழுது மகிழ்ச்சியாக இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) I was unhappy yesterday.
நான் நேற்று மகிழ்ச்சியற்று இருந்தேன். (இறந்தகாலம்)

✱ 'am' மற்றும் 'was' முதலான துணைவினைச் சொற்களை (Auxiliary Verbs) தனித்தனியாக, நிகழ்கால எச்சவினைச் சொல்லுடன் (Present Participle) கையாண்டு, அமைக்கப்பட்ட வாக்கியங்களை இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) I am studying.
நான் படித்துக்கொண்டு இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) I was studying
நான் படித்துக்கொண்டு இருந்தேன். (இறந்தகாலம்)

**குறிப்பு:** மேற்படி இரண்டு வாக்கியங்களிலும் கையாளப்பட்டுள்ள 'Studying' (படித்துக்கொண்டு) எனும் எச்சவினைச்சொல், தனது கருத்தில் மாற்றமடையவில்லை என்பதை நாம் அவதானிக்க வேண்டும்.

மேலும் உதாரணங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) I am studying English now.
நான் இப்பொழுது ஆங்கிலம் படித்துக்கொண்டு இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) I was studying English yesterday night.
நான் நேற்றிரவு ஆங்கிலம் படித்துக்கொண்டு இருந்தேன். (இறந்தகாலம்)

---

(அ) I am drawing a picture now.
நான் இப்பொழுது ஒரு படம் வரைந்துகொண்டு இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) I was writing a letter last night.
நான் கடந்த இரவு ஒரு கடிதம் எழுதிக்கொண்டு இருந்தேன். (இறந்தகாலம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


# உயரமான மனிதர் தந்தை ஆகிவிட்டார்!



உலகில் உயரமான மனிதர் என்று 2005 ஆம் ஆண்டில் கின்னஸ் சாதனை ஏட்டில் இடம்பெற்றிருந்தார். 60 வயதாகின்ற இந்த உயரமான மனிதர் கடந்த வருடம் 29 வயதான ஷியா ஸுஜுவான் என்பவரை திருமணம் முடித்திருந்தார்.



மனைவியுடன் பாவோஷி

"எனக்கு மகன் பிறந்துள்ளதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். அவருக்கு 'தியான்' என்று பெயர் வைத்துள்ளேன். எனது மகன் பொதுவான உயரத்தைக் கொண்டிருப்பதையிட்டும் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக உள்ளது'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



உலகில் உயரம் கூடிய மனிதர் என்ற வகையில் கின்னஸ் சாதனை ஏட்டில் இடம்பெற்றுள்ள சீனாவை சேர்ந்த பாவோஷிஸுவான் என்பவர் தந்தையாகியுள்ளார்.

7 அடி 9 அங்கு உயரத்தைக் கொண்ட பாவோ

# ஒபாமாவிற்கு வழங்கப்படுகின்ற சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் பராக் ஒபாமாவிற்கு அடுத்து வரும் நான்கு வருடங்களுக்கு 24 மணிநேரமும் தீவிரமான பாதுகாப்பினை வழங்க வேண்டியது பெரும் சவாலாக இருக்கும் என்று அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

உலகிலேயே மிக அதிகமான பாதுகாப்பினைப் பெறுகின்ற நபராக அவர் அமைவதுடன் அமெரிக்காவில் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள முதலாவது கறுப்பினத்தவராக இவர் இருப்பதனால் இவரது உயிருக்கு அதிக அச்சுறுத்தல் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே, அவர் நடமாடுகின்ற சகல



இடங்களிலும் உளவுப் பிரிவினரும் தகவல்களை திரட்டிக் கொண்டிருப்பர் என்றும் குறிப்பிடப்படுகின்றது. இதுவரை ஒபாமாவை கொல்வதற்கு தீட்டப்பட்ட இரண்டு சதித்திட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஒபாமா அமெரிக்கா முழுவதும் காரில் வலம் வந்து மக்களை நேரடியாக சந்திக்கும் திட்டமொன்றைக் கொண்டுள்ளார். எனவே, இவ்வாறு அவர் காரில் மக்களை சந்திக்கச் செல்வதாயின் குண்டு துளைக்காத வாகனத்திலேயே அவர் செல்வார் என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒபாமா 2007 ஆம் ஆண்டிலிருந்து தேர்தல் பிரசார பணிகளை ஆரம்பித்த நாள் தொடக்கம் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மாலைதீவுக்கு மாற்றீடாக வேறு நிலமொன்றை வாங்கும் உத்தேசம்



புவி வெப்பமடைதலின் காரணமாக மாலைதீவுகள் நீரில் முழுமையாக மூழ்கி விடக்கூடிய ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாக எச்சரிக்கப்பட்டிருப்பதனால் அதற்கு மாற்றீடாக இன்னொரு நிலப்பகுதியொன்றை விலைக்கு வாங்குவதற்கு திட்டமிட்டிருப்பதாக மாலைதீவுகளின் புதிய ஜனாதிபதி மொஹமட் நஷீட் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் 'கார்டியன்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் இவ்வாறு அவர் தெரித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் காணப்படுகின்ற 1,192 தீவுகளை உள்ளடக்கியுள்ள மாலைதீவுகள் புவி வெப்பமடைதலின் காரணமாக கடல் நீர்மட்டம் உயர்வடையும் காரணத்தால் நீரில் மூழ்கி விடக் கூடிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

மாலைதீவுகளில் கடந்த மாதம்தான் ஜனநாயக ரீதியிலான தேர்தல் முறையின் மூலமாக மொஹமட் நஷீட் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனவே, தனது எதிர்கால திட்டங்கள் குறித்து விபரிக்கையிலேயே தனது திட்டங்களை அவர் தெரிவித்துள்ளார். மேலும், தமது நாட்டிற்கு உல்லாசப் பிரயாணத்துறை மூலமாக கிடைக்கின்ற வருமானத்தில் ஒரு பங்கினை சேமிக்கவுள்ளதாகவும் அந்த சேமிப்புத் தொகையைக் கொண்டே மாலைதீவுகளுக்கு மாற்றீடாக புதிய நிலப்பகுதியொன்றை வாங்குவதற்கு உத்தேசித்திருப்பதாகவும் ஜனாதிபதி மொஹமட் நஷீட் குறிப்பிட்டுள்ளார்.

## அற்லஸ் கேள்வி - 178

**கேள்வி: உலகிலேயே உயரமான மனிதரின் பெயர் என்ன?**

**சரியான விடை........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே<br>உலகைக் காண்போம், கேள்வி - 178,<br>விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 176 இன் சரியான விடை: மெல்மைன்**

**பரிசு பெறுவோர்**

அ.மனோராஜ் அன்ரனி,<br>டொக்டர் சுப்ரமணியம் வீதி, சுன்னாகம்.

அகமட் யூனுஸ்,<br>57/3, இராஜசிங்ஹ மாவத்தை,<br>பொருபனை, இரத்மலானை.

எஸ்.பிருந்தா,<br>தெல்பெத்த தோட்டம், லோவர் டிவிஷன், பதுளை.

# உதவி கோரும் பிரிட்டன் பிரதமர்



உலகில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சீனா மற்றும் மத்தியகிழக்கு நாடுகள் உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் கோர்டன் பிரவுன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு கோடிக்கணக்கான டொலர்கள் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் பல நிதி நெருக்கடிகளின் காரணமாக நிதிப்பற்றாக்குறைக்கு ஆளாகியுள்ளன. எனவே,இவை மென்மேலும் விரிவடைந்து விடுவதற்கு முன்பதாக உதவக்கூடிய நாடுகள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.அவ்வாறே பாதிப்பை எதிர்நோக்கியுள்ள நாடுகளுக்கு நிதி காப்புறுதி முறையொன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கோர்டன் பிரவுன் மேலும் தெரிவித்துள்ளார்.

எண்ணெய் விலை அதிகரிப்பின் காரணமாக 51 ட்ரில்லியன் டொலர் லாபத்தை ஈட்டியுள்ள எண்ணெய் வளம் கொண்ட நாடுகளால், இந்த நிதி நெருக்கடிக்கு உதவக்கூடிய வசதிகள் இருப்பதாகவும் பிரவுன் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரது கவனத்தையும் ஈர்த்த ஜனாதிபதித் தேர்தல்

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

## காங்கிரஸ்

ஐக்கிய அமெரிக்காவின் சட்டவாக்கத்துறை காங்கிரஸ் ஆகும். இது இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டது.

1. பொதுமக்கள் சபை - கீழ் சபை
2. செனட் சபை - மேல் சபை

ஐக்கிய அமெரிக்க அரசியல் அமைப்பின்படி, சட்டவாக்க அதிகாரம் காங்கிரஸின் இரு சபைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக எளிய நடைமுறையில் பார்க்கும் இடத்து கீழ் சபையே காங்கிரஸ் என




அதிகமாக அழைக்கப்படுவதுண்டு. கீழ் சபையின் மொத்த அங்கத்தவர் தொகை 432 ஆகும். மேல்சபையாகிய செனட் சபையின் மொத்த அங்கத்தவர் தொகை 100 ஆகும். ஐக்கிய அமெரிக்காவின் 50 மாநிலங்களில் இருந்து தலா இருவர் வீதம் இவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

ஜனாதிபதித் தேர்தலின் பின் வரும் ஜனவரி 20 ஆம் திகதி ஜனாதிபதி பதவி ஏற்பார். அதற்கு முன்பு ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படாமல் இருப்பின், உப ஜனாதிபதி ஜனாதிபதி பணிகளை ஆற்றுவார். அமெரிக்க வரலாற்றில் 1801 இல் ஜெபர்சனும் 1825 இல் அடம்ஸ் என்பவரும் இவ்வாறாக பிரதிநிதிகள் சபையால் (காங்கிரஸால்) ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




## ஜனாதிபதிக்கான பிரதான தகுதிகள்

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர் 35 வயதைப் பூர்த்தி செய்தவராகவும் ஐக்கிய அமெரிக்காவில் 14 வருடத்திற்கு குறையாமல் வசித்த அமெரிக்க பிரஜையாகவும் இருத்தல் வேண்டும். மேலும், ஒருவர் இரு தடவைகள் மாத்திரமே ஜனாதிபதியாகும் வாய்ப்புண்டு.

## அமெரிக்க ஜனாதிபதியின் கடமைகளும் அதிகாரங்களும்

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியின் கடமைகளும் அதிகாரங்களும் 3 முக்கிய துறைகளில் தங்கியுள்ளன.

1. நிர்வாகத்துறை சார்ந்த கடமைகளும் அதிகாரங்களும்
2. சட்டத்துறை சார்ந்த கடமைகளும் அதிகாரங்களும்
3. நீதித்துறை சார்ந்த கடமைகளும் அதிகாரங்களும்

## ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் கட்சிகள்

ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் யாப்பில் கட்சிகள் பற்றி கூறப்படவில்லை. எனினும், கட்சிகள் விரும்பப்படுவது பற்றி கூறப்பட்டுள்ளது. அமெரிக்காவின் அரசியல் கட்சிகளை 'கட்சிகள்' என்று அழைப்பதைவிட 'குழுக்கள்' என்று அழைப்பதே பொருத்தமானதாகும். அதன்படி, ஐக்கிய அமெரிக்காவில் பல அரசியல் கட்சிகள் இருந்தாலும் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டாகும். அவையாவன:-

1. ஜனநாயகக் கட்சி
2. குடியரசுக் கட்சி

குடியரசுக் கட்சி ஒற்றுமைக்கும் மனித தர்மத்திற்கும் போராடும் கட்சி என்று அழைக்கப்படுகின்றது. இது செல்வந்தர்கள் சார்புடைய கட்சியாகும்.

ஜனநாயகக் கட்சி தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் கட்சி என்று அழைக்கப்படுகின்றது. பொதுவாக தென் மாநிலங்களில் இக் கட்சிக்கு அதிக ஆதரவு உண்டு.

## வெள்ளை மாளிகையில் கறுப்பு ஜனாதிபதி

நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மாபெரும் வெற்றியீட்டி, அமெரிக்காவின் மொத்த சனத்தொகையில் 12.1% மாத்திரம் கொண்ட சிறுபான்மையினத்தைச் சேர்ந்த முதலாவது கறுப்பின அமெரிக்க ஜனாதிபதி என்ற வரலாற்றுச் சாதனையை 47 வயதான பராக் ஒபாமா படைத்துள்ளார்.

அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் ஜோன் மெக்கெய்னும் ஜனநாயகக் கட்சியின் சார்பில் பராக் ஒபாமாவும் போட்டியிட்டனர். அமெரிக்க தேர்தல் முறைப்படி, மொத்தமாகவுள்ள 538 தேர்வுக்குழுக்களில் 270 தேர்வுக்குழுக்களின் வாக்குகளைப் பெறுவது அவசியமாகும். இந்நிலையில் ஒபாமா 349 தேர்வுக்குழுக்களின் வாக்குகளைப் பெற்று அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, ஒபாமாவை எதிர்த்துப் போட்டியிட்ட ஜோன் மெக்கெய்ன் 162 தேர்வுக்குழுக்கள் வாக்குகளை மாத்திரமே பெற்றுள்ளார். 'மாற்றம் தேவை' என்ற கோஷத்துடன் ஒபாமா தேர்தலைச் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய அமெரிக்காவின் 50 மாநிலங்கள்



| | | |
|---|---|---|
| 01. நியூஹெம்ப்ஷயர் | 21. ஐயோவா | 40. வியோமிங் |
| 02. மசாசுசெட்ஸ் | 22. இல்லிநொய்ஸ் | 41. மொன்டானா |
| 03. மேய்ன் | 23. இன்டியானா | 42. மேற்கு வேர்ஜினியா |
| 04. ரோட் ஐலண்ட் | 24. ஒஹியோ | 43. ஊட்டா |
| 05. கனெக்டிக்கட் | 25. பென்சில் வேனியா | 44. அரிசோனா |
| 06. நியூ ஜேர்சி | 26. நியூயோர்க் | 45. வொஷிங்டன் |
| 07. டெலாவெயார் | 27. வர்மன்ட் | 46. ஒரிகன் |
| 08. மேரிலேண்ட் | 28. விஸ்கொன்சின் | 47. நெவாடா |
| 09. வேர்ஜினியா | 29. மின்னசொட்டா | 48. கெலிஃபோர்னியா |
| 10. வட கரோலினா | 30. இடாஹோ | 49. அலெஸ்கா |
| 11. தென் கரோலினா | 31. மிச்சிகன் | 50. ஹவாய் |
| 12. ஃப்ளோரிடா | 32. டெக்சாஸ் | |
| 13. ஜோர்ஜியா | 33. ஒக்லஹோமா | |
| 14. அலபாமா | 34. கென்சாஸ் | |
| 15. மிசிசிப்பி | 35. நெப்ரஸ்கா | |
| 16. லுசியானா | 36. வட டெகொட்டா | |
| 17. ஆர்கன்சாஸ் | 37. தென் டெகொட்டா | |
| 18. டென்னெஸ்ஸீ | 38. நியூ மெக்ஸிக்கோ | |
| 19. கென்டகி | 39. கொலராடோ | |
| 20. மிசூரி | | |

-ப.இரஞ்சித் ஜெயகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்னம் ஒரு சிறிய கிராமம். அங்கு ஒருநாள் ஒரு துறவி வந்தார். அவர் வாய் திறந்து யாருடனும் ஒரு வார்த்தையேனும் பேசியதில்லை. தனக்கு எதுவும் தேவையானால் கூட சைகையால்தான் அறிவிப்பார். அந்த ஊரில் தருமு என்ற ஒரு ஏழைக் குடியானவர் இருந்தார். அவர் தினமும் அந்த துறவியை சென்று வணங்குவார். தன் வீட்டுத் தோட்டத்துப் பூக்களை பறித்துச் சென்று துறவிக்குக் கொடுப்பார்.

அதேபோல் தன் வீட்டில் செய்யும் பலகாரங்களையும் சாப்பாட்டையும்கூட தன் வீட்டார் சாப்பிட்டு எச்சில்படுத்தும் முன் எடுத்துப் போய் அந்த துறவிக்குக் கொடுப்பார். இப்படியாகப் பல நாட்கள் நடந்தது. துறவியும் மிகுந்த அன்புடன் தருமு தரும் எல்லாவற்றையும் ஒரு சிறு புன்னகையுடன் பெற்றுக்கொள்வாரே தவிர, ஒரு வார்த்தைகூட பேசமாட்டார். மாறாக கடவுள் அருள்வார் என்று சைகை மாத்திரம் காட்டுவார்.

இந்த ஊரில் நீலகண்டர் என்ற ஒரு பண்டிதர் இருந்தார். தருமு துறவிக்குச் செய்கின்ற பணிவிடைகளைக் கவனித்தார் அவர். தருமு தினமும் துறவிக்குப் பழங்களும் பலகாரங்களும் கொடுத்து வருவதைக் கண்டார். இதைக் கண்ட பண்டிதரின் மனதில் ஆத்திரமும் பொறாமையும் உண்டாயிற்று. அவர் பல நூல்களைப் படித்து ஆராய்ந்த பண்டிதர். ஆஸ்திக விற்பன்னர். குன்னம் கிராமத்தில் பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்தவர். "இது என்னடா திமிர்வாதம்? இதே ஊரைச் சேர்ந்த நமக்கு பணிவிடைகளைச் செய்யக் கூடாதா? மாறாக அந்த துறவிக்குச் செய்கிறானே?'' என்று மனம் பொருமினார்.

ஒருநாள்.... அவர் தருமுவை அழைத்து வரச் சொன்னார். அவரும் வந்து பண்டிதரைப் பணிந்தார். "ஏனப்பா தருமு



# கற்றவனின் பண்பு

சிறிதும் தராதரம் தெரியாதவனாக இருக்கிறாயே... நான் இந்த ஊரில் வாழும் புகழ்பெற்ற பண்டிதர். எனக்கு நீ துறவிக்குச் செய்யும் பணிவிடைகளைச் செய்யக்கூடாதா? அந்த முட்டாள் துறவிக்குச் செய்கிறாயே... அவன் என்னைவிட எவ்விதத்தில் அறிவாளி? எவ்விதத்தில் யோக்கியன்? அந்நியன் அவன். நீ அவனுக்கு அன்பு செலுத்தி பணி செய்யும் காரணம் என்னவோ?'' என்று கேட்டார். தருமு சிறிது யோசித்தார். பின்பு, "பண்டிதரே! என்னை மன்னிக்க வேண்டும். நீங்கள் கூறுவது போல அந்தத் துறவியைப் பற்றி எனக்கு அதிகம் எதுவும் தெரியாது. ஆனால், அவர் நல்லவர்; உத்தமர். உம்மை விட மிகவும் மேலானவர். ஏன் என்றால் அந்தத் துறவி இதுவரை தன் வாயைத் திறந்து பேசியதே இல்லை. உம்மைப் போல யாரையும் அவர் அவதூறாக ஏசியதும் இல்லை. எனவே, அவரே உம்மை விட மேலான உயர்ந்த பண்பாளராக படிப்பாளியாக, என் கண்களுக்குத் தோன்றுகிறார்'' என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

பண்டிதர் தன் தவறை உணர்ந்து தலைகுனிந்து கொண்டார் ஏட்டுக் கல்வி கல்வியல்ல. பிறரை மனதால் இகழாமல், தூற்றாமல் பெருந்தன்மையுடன் வாழும் வாழ்வே உயர்ந்த வாழ்வும், நல்ல கல்வியும் ஆகும். மனிதனின் பண்பு, அவன் பேசும் வார்த்தையில் தான் வெளிப்படும். எனவே, அளவுடன் பேசி நல்ல பெயர் எடுக்கவேண்டும்.






# பேய்களுடன் நடமாடும் மனிதரா?

கெபினுக்கு சென்ற விமலிடம் மாதவன் சிரித்துக்கொண்டே கேட்டார். "என்ன தம்பி உங்களுடைய பிரச்சினையெல்லாம் முடிந்துவிட்டதல்லவா?''

"பிரச்சினையா என்ன சொல்கிறீர்கள்?''

"இனி இரவு காவல் வேலை செய்யத் தேவையில்லையல்லவா? காவல்காரர்தான் வந்துவிட்டாரே''

"ஓ... அதைச் சொன்னீர்களா?''

"ஆமாம் அதுதானே உங்களுக்கு பெரும் பிரச்சினையாக இருந்தது. அது சரி இவ்வளவு நேரம் எங்கு போய் இருந்துவிட்டு வருகிறீர்கள்? இனியாவது கொஞ்சம் ஒப்பரேட்டிங் வேலை படிக்கலாம் அல்லவா?''

"ம்... படிக்கலாம்தான். காவல்காரர்தான் என்னை ரவுன்ஸ் கூட்டிக்கொண்டு போனார்''

"ஓஹோ அப்படியா? பேய் கதை நிறையச் சொல்லியிருப்பாரே''

"ஆமாம். பேய் அனுபவம் பற்றி எனக்கு காட்டித்தருவதாகக் கூறினார். அதுசரி அண்ணன் அது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

"ம்... எனக்குத் தெரியாதா. அவரைப்பற்றி. அவரே ஒரு பேய் மனிதனாயிற்றே!''

"பேய் மனிதனா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள் அண்ணன்?''

"அது வந்து தம்பி பேய்களுடன் நடமாடுபவரை பேய் மனிதன் என்றுதானே சொல்லவேண்டும்''

"பேய்களுடன் நடமாடுகிறாரா...? புரியும்படி சொல்லுங்கள்''

"அதாவது தம்பி இரவில் பேய் நடமாடும் இடங்களிளெல்லாம் அவரும் இருப்பார்'' என்று கூறிவிட்டுச் சிரித்தார். மாதவன் அவரைப்பற்றிக் கிண்டலாகப் பேசுகிறார் என்று நினைத்துக் கொண்டு விமல் மௌனமாக இருந்தான்.

சிறிது நேரத்தில் அன்றைய இரவுக் காட்சியும் முடிவு பெற்றது. எல்லோரும் திரையரங்கை விட்டுப் போய்விட்டார்கள். காவல்காரர் மட்டும் டோர்ச் வெளிச்சத்தை பாய்ச்சிக் கொண்டு திரையரங்குக்குப் பின்னால் நடந்து கொண்டிருந்தார்.

விமல், "இன்றாவது போய் நிம்மதியாகப் படுத்துறங்குவோம்'' என்று நினைத்தபடிதான் படுக்கும் அறையில் போய் படுத்தான். ஏனோ தெரியவில்லை. அன்று அவனுக்கு உறக்கமே வரவில்லை.

"ச்சே... மற்ற நாட்களில் தூக்கம் வந்து பாடுபடுத்தும். பயத்தில் வேறு நடுங்கிக் கொண்டிருக்கவேண்டும். இன்று காவல்காரர் இருக்கிறாரே என்ற நிம்மதியில் படுத்து உறங்கலாமென்றால் தூக்கம் வரமாட்டேன்கிறதே'' என்று தன்னையே நொந்து கொண்டான்.

அப்பொழுது அவனுக்கு ஒரு யோசனை வந்தது. படுத்துக் கொண்டே ஏதாவது வாசித்தால் உறக்கம் வந்துவிடும். அந்த அறைக்குள், உள்ள அலுமாரியில் நாவல், கதைப்புத்தகங்கள் இருப்பதை அவன் கண்டிருக்கிறான். ஆனால், ஒரு ந்ாளாவது அதை எடுத்து அவன் பார்த்ததில்லை. இன்று அதில் ஒன்றை எடுத்து வாசிக்கலாம் என்று நினைத்து அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான்.

அப்போது அவன் கண்ணில் பட்டது 'பேய் மனிதன்' எனும் நாவல்

(தொடரும்...)

**இரவில் பேய்கள் நடமாடும் இடங்களிலெல்லாம் காவல்காரரும் இருப்பார் என்று மாதவன் கூறியதைக் கேட்டு அவர் கிண்டலாகக் கூறுகிறார் என விமல் நினைத்துக் கொண்டான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிக்காக உழைத்த கங்குலியின் ஓய்வு!

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரை இந்திய அணி 2-0 என்ற கணக்கில் வெற்றியீட்டியதுடன் அதே இந்திய அணியின் நீண்ட கால வீரரான கங்குலி டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றமை சகலரது கவனத்தையும் ஈர்த்த விடயமாக அமைந்தது. இந்திய அணியில் சமீப காலமாக குறிப்பாக தேர்வுக்குழுவினரால் சர்ச்சைக்குரி வீரராகவே கருதப்பட்டு வந்தார் கங்குலி. எனினும், கிரிக்கெட் ரசிகர்களோ கடைசி வரையிலும் கங்குலி மீது அபிமானம் காட்டியே வந்தனர். கங்குலியைப் பொறுத்தவரையில் உண்மையில் இந்திய அணியில் ஒரு போராட்ட குணம் மிக்க வீரராகவே இருந்து வந்துள்ளார். சில வீரர்கள் சாதனைக்காக தமது தனிப்பட்ட ஓட்ட எண்ணிக்கையை பெருக்கிக் கொள்வதற்கு ஆர்வம் காட்டிய சந்தர்ப்பங்களில் கங்குலியோ அணியின் வெற்றி இலக்கையே தனது சிந்தனையில் கொண்டு போட்டியிட்டுள்ளார். இதனால், இந்திய அணி பல போட்டிகளில் வெற்றியையும் ஈட்டியது. இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் அண்மைக்காலமாக கங்குலிக்கும் இந்திய தேர்வுக்குழுவினர்களுக்கும் இடையே சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. இந்த இழுபறியினால் இந்திய அணியிலிருந்து கங்குலி ஓரங்கட்டப்பட்டார். இப்படி அவர் ஓரங்கட்டப்பட்டமையானது மனதளவில் மட்டுமன்றி அவரது '·°·போர்ம்' தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தியது.



இத்தகைய நிலையில்தான் வெவ்வேறு அழுத்தங்களின் காரணமாக கங்குலிக்கு இடைக்கிடையே அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், இப்படி இடைக்கிடையே வாய்ப்புக்கள் வழங்கப்பட்டமையினால் அவரால் பழையபடி நேர்த்தியாகத் துடுப்பெடுத்தாட முடியாதிருந்தது. ஆகவே, இதனைக் காரணமாக வைத்து அணியி லிருந்து மீண்டும் ஓரங்கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே கங்குலி தானாகவே ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

அந்தவகையில் பார்க்கையில் மனதளவில் ஏற்பட்ட பாதிப்புக்களின் காரணமாகவே கங்குலி ஓய்வு பெற்றிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

கங்குலி தனிப்பட்ட சாதனைகளை நிகழ்த்தினாரோ இல்லையோஆனால், இந்திய அணியின் கடந்தகால டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி வெற்றிகளைப் புரட்டிப் பார்த்தால் கங்குலியினால் இந்திய அணிக்கு பெற்றுக் கொடுத்த வெற்றிகளே அவரது திறமைக்கு சான்று.



# இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி மே.இ.தீவுகளை தோற்கடித்தது

மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் கிரிக்கெட் அணிக்கும் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்குமிடையே கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் இலங்கை மகளிர் அணி வெற்றி பெற்றுள்ளதன் மூலம் 3-2 என்ற கணக்கில் போட்டித் தொடரினை இலங்கை மகளிர் அணி வெற்றி கொண்டது.

ஐந்தாவதும் இறுதியுமான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணி 44.4 ஓவர்களில் சகலரும் ஆட்டமிழந்து 120 ஓட்டங்களையே பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக அவிகிலைரா என்ற வீராங்கனையே அதிக ஓட்டங்களாக 28 ஓட்டங்களைப் பெற்றார்.

வெற்றி இலக்கை 121 ஆகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 37.1 ஓவர்களில் மூன்று விக்கெட்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இலங்கை அணியின் சார்பாக விளையாடிய சஷிகலா என்ற வீராங்கனையே அதிகூடிய ஓட்டங்களாக 32 ஓட்டங்களைப் பெற்றார். ஆரம்பத் துடுப்பாட்டத்தில் இறங்கிய தேதுனு சில்வாவும், சமரியும் முதலாவது விக்கெட் இணைப்பாட்டமாக 63 ஓட்டங்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப ஓவர்களில் மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் விரைவாக ஓட்டங்களைப் பெற்ற போதிலும், அவர்களின் கடைசி ஏழு விக்கெட்களையும் 13 ஓட்டங்களுக்கு வீழ்த்துவதற்கு இலங்கை அணியினரால் முடிந்தமையால் அவர்களை 120 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழக்கச் செய்ய முடிந்தது.

சுவினி டி சில்வா சிறந்த பந்து வீச்சாக 25 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. ஆட்டத்தொடர் நாயகியாக இலங்கை அணியின் தலைவி, சஷிகலா சிறிவர்தன தேர்ந்தெடுக்கப்பட்டார்.



## ஓய்வுபெற்ற வீரர் மீண்டும் களத்தில்

உலகிலேயே புகழ் பெற்ற சைக்கிளோட்ட வீரரான பிரான்ஸைச் சேர்ந்த லான்ஸ் ஆம்ஸ் மீண்டும் சர்வதேச சைக்கிளோட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள இருப்பதாக அறிவித்துள்ளார்.

சுகவீனம் காரணமாக 2005 ஆம் ஆண்டில் இவர் சைக்கிளோட்டக் களத்திலிருந்து உத்தியோகபூர்வமாக ஓய்வை பெற்றிருந்தார்.

எனினும், தற்போது பூரண குணத்தைப் பெற்றுள்ளமையினால் மீண்டும் போட்டிக்களத்தில் நுழையவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். கஸகஸ்தான் எஸ்டனா என்ற அணியின் சார்பாகவே லான்ஸ் ஆம்ஸ் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்படி, 2009 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள போட்டியிலும் அதனையடுத்து பிரான்ஸில் நடைபெறும் சைக்கிளோட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டு அப்போட்டியில் வெற்றியீட்டும் நம்பிக்கையைக் கொண்டுள்ளார்.

இவர் ஓய்வு பெற்றிருந்த போதிலும் இதுவரைகாலமும் போட்டி ஓட்ட தூர நேரத்திலும் தரப்படுத்தலிலும் இவரே முன்னணியில் இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணி பாகிஸ்தான் செல்லுமா?

பாகிஸ்தானுக்கான இந்திய கிரிக்கெட் அணியின் விஜயம் ரத்துச் செய்யப்படலாம் என்று கருதப்படுவதால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பெரிதும் இக்கட்டுக்கு ஆளாகியிருப்பதாக கருதப்படுகின்றது.

அடுத்த வருடம் பாகிஸ்தானில் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் ஐந்து ஒருநாள் போட்டிகளிலும் ஒரு 'டுவென்டி டுவென்டி' போட்டியிலும்இந்திய அணி கலந்து கொள்வதாக உள்ளது. எனினும், அண்மைக் காலமாக பாகிஸ்தானின் பல இடங்களில் ஏற்பட்ட குண்டுவெடிப்புக்களினால் பாதுகாப்பில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியே இந்திய அணியின் விஜயம் இவ்வாறு ரத்துச் செய்யப்படலாம் என்று கருதப்படுகின்றது.

பாகிஸ்தான் நிலவரத்தை உன்னிப்பாக அவதானித்து இந்திய வெளியுறவுத் துறையே இது விடயத்தில் பின்னடிப்பதாக கருதப்படுகின்றது.

ஆனால், சிலவேளை வெளியுறவுத் துறையினர் சாதகமான தீர்மானமொன்றை அறிவிக்கக் கூடும் என்றும் இந்திய கிரிக்கெட் சபை தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்து வரும் நாட்களில் இது தொடர்பாக பாகிஸ்தான் தரப்பு முழு ஈடுபாட்டைக்காட்டி இந்தியத் தரப்பினை இதற்கு இணங்கச் செய்வதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சர்வதேச டென்னிஸ் வீராங்கனையின் சரிவு!

உலகிலேயே மிகவும் புகழ் பெற்ற டென்னிஸ் வீராங்கனையாக கருதப்படுகின்ற சேர்பியாவைச் சேர்ந்த எனா இவ்நொச்சிவ் அண்மையில் சில தோல்விகளை சந்தித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டிற்கான உலகக் கிண்ண போட்டித் தொடரில் டோஹா கட்டாரில் நடைபெற்ற போட்டிகளில் இவர் தோல்வியை தழுவியுள்ளார். உலகின் முதலாம் தர வீராங்கனையான அமெரிக்காவைச் சேர்ந்த செரினா வில்லியம்ஸிடமே இவர் தோல்வியுற்றார்.



2008 இல் ஆரம்ப கட்டத்தில் வெற்றிகளைக் குவித்து வந்த எனா இவ்நொச்சிவ் வருடத்தின் நடுப்பகுதியில் உலகிலேயே முதலாம் தர வீராங்கனை என்ற அந்தஸ்த்தையும் பெற்றிருந்தார். எனினும், பிரான்ஸில் நடைபெற்ற பகிரங்க டென்னிஸ் போட்டியில் தனது திறமையை நிரூபிக்கத் தவறிய எனா, இம்முறை நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகள் பலவற்றிலும் பின்னடைவையே சந்தித்துள்ளார்.

என்றாலும், இந்த வருடம் பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் போட்டியில் வெற்றி வீராங்கனையாகவும் அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டியில் இரண்டாம் இடத்தையும் இவர் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து 'இந்தியன் வீல்ஸ்' போட்டித் தொடரிலும் இவர் செம்பியனாகத் தெரிவானார்.

இதேவேளை, அண்மைக் காலமாக எனா இவ்நொவிச்சிற்கு ஏற்பட்ட பின்னடைவுகளினால் சர்வதேச தரப்படுத்தல் பட்டியலில் ஏழாம் இடத்திற்கு அவர் பின்தள்ளப்பட்டுள்ளார். எனினும், இன்றும்கூட ரசிகர்கள் மத்தியில் ஜனரஞ்சகமான டென்னிஸ் வீராங்கனையாக எனாவே திகழ்கின்றயும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் மலரும் மலர்கள்

**உலகில் அதிகமான மலர்கள் காலையிலேயே மலர்கின்றன. எனினும், சில மலர்கள் பொழுது சாய்ந்த பின்னரும் மலர்கின்றன. அது மாலை வேளையாகவோ, இரவாகவோ இருக்கலாம். அந்தவகையில், பொழுது சாய்ந்த பின்னர் மலரும் சில மலர்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.**

## செம்மல்லிகை *(Murraya Paniculata)*



ஆங்கில மொழியில் Orange Jesmin, Honey Bush ஆகிய பெயர்களால் அழைக்கப்படும் செம் மல்லிகை, இரவில் பூக்கும் நறுமணம் கமழும் மலர்களில் ஒன்றாகும். அழகிய கொடியாகவோ அல்லது சிறிய மரமாகவோ இத்தாவரம் வளரும். இத்தாவரத்தின் இலைகள் கடும்பச்சை நிறத்தை கொண்டதாகவும் பளபளப்பாக மின்னக்கூடிய தன்மையைக் கொண்டதாகவும் காணப்படும். வெள்ளை நிற மலர்கள் கொத்தாகப் பூக்கும். இதனை தாழ்நில உலர் வலயத்தில் பொதுவாகக் காணலாம்.

## அந்திமந்தாரை *(Mirabilis Jalapa)*

மாலையில் மலரும் மலர்களில் அந்திமந்தாரையும் ஒன்று. இது அந்தியில் மலர்வதால் இதற்கு அந்திமந்தாரை எனப் பெயர் வந்தது. இதனால் ஆங்கில மொழியில் இம்மலரை Four-O'clock flower என்றும் தமிழில், சாதாரண பேச்சு வழக்கில் 'நாலு மணிப்பூ' என்றும் அழைப்பர்.



இலக்கியத்தில் சந்தியாகாலி, சந்தியாராகம் என்றும் அழைப்பர். விரைவாக பரவி வளரக்கூடிய இத்தாவரத்தின் தாயகம் அமெரிக்காவாகும். இதன் மலர்கள் ஊதா, வெள்ளை, சிவப்பு, மஞ்சள் என பல்வேறுபட்ட நிறங்களில் மலரும். சில அந்திமந்தாரை இன தாவரங்களில் பூக்கும் பூக்களில் ஒரு பூவில் இரு நிறங்கள் இருப்பதையும் காணலாம். அவ்வாறே, ஒரு செடியில் இரு வேறு நிறங்களைக் கொண்ட மலர்களையும் சிலவேளைகளில் காணலாம். வருடம் முழுவதும் பூத்துக் குலுங்கும் இத்தாவரங்களை விதைகள் மூலம் இலகுவில் வளர்க்கலாம்.

## மரமல்லிகை *(Jesminum Spp)*



இதனை கொத்து மல்லிகை, கொடி மல்லிகை என்றும் அழைப்பர். இதில் பல வகைகள் உள் ளன. மேல்நோக்கிப் படரும் கிளைகளைக் கொண்டு காணப்படும். இத்தாவரத்தில் வெள்ளை நிற மலர்கள் பூத்துக் குலுங்கும். கொத்துக்கொத்தாகப் பூக்கும் இம்மலர்கள் தூய் மையான வெள்ளை நிறம் கொண்டவை. நறு மணம் வீசுபவை. மலரின் கீழ்ப்பகுதி மிகச் சிறிய குழாய் வடிவத்தைக் கொண்டு காணப் படும்.



## கொடித்தாமரை *(Epiphyllum Crenatum)*

மரங்களில் படர்ந்தவாறு நேராகவோ, பற்றையாகவோ வளரும் (சார்ந்து வளரும் தாவரம்) கொடித்தாவரமாக இதனை இனங்காட்டலாம். உருளை வடிவ தண்டினைக் கொண்ட இத்தாவரத்தின் இலைகள் சாம்பல் நிறத்தை ஒத்த பச்சை நிறத்தில் காணப்படும். மலரின் வெளிப்பகுதி பச்சை அல்லது இளஞ்சிவப்பு அல்லது கடும் மஞ்சள் நிறமுடையதாகக் காணப்படும்.

-இரஞ்சித் ஜெயகர்

அகில இலங்கை ரீதியில்
10,000
மாணவர்களுக்கு தபால் மூல
ஆங்கில கல்வியை வழங்கும்
புலமை பரிசில் 2008

சரளமாக ஆங்கிலத்தில் எழுத,பேச, வாசிக்க பயிற்சியை
வழங்கும் தபால் மூல ஆங்கில பாடநெறி.

பாடசாலை மாணவர்களுக்கு விசேடமானது
தொழில் புரிபவர்களும் விண்ணப்பிக்கலாம

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்ப படிவத்துக்கும் ரூ 15/-
முத்திரை ஒட்டிய சுய முகவரி எழுதிய நீள கடிதவுரையை
அனுப்பவும். டிசம்பர் 31 முன்னர் விண்ணப்பிக்கவும்.

The Manager
Nithya's Spoken English Course,
P.O.Box.119, Kandy. 0814-929193

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 180 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-191) |
|---|---|---|---|---|
| ரி.கிஷோதர், தரம் - 3B, மத்திய கொழும்பு இ.வித்., கொழும்பு. | பிஹாம் சுக்ரி, தரம் - 2, களு/அல்-ஹஸனியா ம.வித்., மக்கொனை. | கு.தனுஷிகா, தரம் - 9, சைவப்பிரகாச மகளிர் கல்., வவுனியா. | அ.நுஸ்ரி, தரம் - 7, அல்ஹிறா வித்., காத்தான்குடி-05. | எம்.எஸ்.எஃப்.ரிஃப்லா, தரம் - 12(கலை), அளுபொத மு.ம.வித்., அளுபொத. |

### பின்வருவனவற்றின் தமிழ்-ஆங்கில பெயர்களை எழுதுக. 2

(a)



______

______

(b)



______

______

(c)



______

______


(d)



______

______

(e)



______

______

(f)



______

______

### எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக. 4

1. சென்தமிழ் - ..............................
2. நிப்பன்தம் - ..............................
3. புண்முறுவள் - ..............................
4. ஆற்பாட்டம் - ..............................
5. சர்க்கரவர்தி - ..............................
6. குடியிறுப்பு - ..............................

### அன்பு தம்பி, தங்கைகளே! இது உங்கள் கவனத்துக்கு....

அற்லஸ் அறிவுக்கு விருந்து போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றும் உங்களுக்கு எமது நன்றிகள். நீங்கள் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கும் தபாலட்டைகள் போட்டிகளில் கலந்து கொள்வதில் உங்களுக்கு இருக்கின்ற ஆர்வத்தை எமக்கு தெளிவாகக் காட்டுகின்றது. தொடர்ந்து போட்டிகளில் கலந்து கொள்ளுங்கள். பரிசில்களை வெல்லுங்கள். அத்துடன், இதுவரை வெற்றியாளர்களாகத் தெரிவாகாதவர்கள் நீங்கள் எதிர்பாராத நிலையில் வெற்றியாளர்கள் ஆகலாம். எனவே, போட்டிகளுக்கு உங்கள் விடைகளைத் தொடர்ந்து அனுப்புங்கள். அதேவேளை, போட்டிகளில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவாகி, இதுவரை தமக்குரிய பரிசினைப் பெறாதவர்கள் இருப்பின், பத்திரிகையில் பிரசுரமானவாறு **உங்கள் பெயர், கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம்** என்பனவற்றுடன் நீங்கள் கலந்து கொண்டு **வெற்றியீட்டிய போட்டி இலக்கம், பிரசுரமான திகதி** என்பனவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கடிதமொன்றை **விஜய், அறிவுக்கு விருந்து, (முறைப்பாடு) த.பெ இல: 2037, கொழும்பு** என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். இதுவரை பரிசில்களைப் பெறாதவர்களுக்கு விரைவில் தங்களுக்குரிய பரிசில்களை அனுப்பி வைக்க இது எமக்கு உதவியாக இருக்கும்.

### கணக்குப் புதிர் 3

(A) ✱ மாலதியிடம் 10 பந்துகள் உள்ளன.

✱ ரமணனிடம் மாலதியிடம் இருக்கும் பந்துகளில் அரைவாசி எண்ணிக்கையிலான பந்துகள் உள்ளன.

✱ இவர்கள் இருவரிடமுள்ள பந்துகளை கூடையில் போட்டால் கூடையிலுள்ள பந்துகளின் மொத்த எண்ணிக்கை 54 ஆகும்.

(i) ரமணனிடம் உள்ள பந்துகள் எத்தனை?.....................

(ii) ரமணன் மற்றும் மாலதியிடம் இருக்கும் பந்துகளை கூடையில் போடுவதற்கு முன் கூடையில் எத்தனை பந்துகள் இருந்தன? ............................

b) ✱ பாடசாலை ஒன்றில் கடந்த ஆண்டில் 4000 சீருடைகள் விநியோகிக்கப்பட்டன.

✱ இந்த ஆண்டு கடந்த ஆண்டிலும் பார்க்க 1/4 பங்கு குறைவாகக் கிடைத்தது.

✱ ஒவ்வொரு வருடமும் பாடசாலையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே சீருடைகள் விநியோகிக்கப்படுகின்றன.

(i) கடந்த ஆண்டு பாடசாலையில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?.................................

(ii) இந்த ஆண்டு எத்தனை சீருடைகள் கிடைத்தன? ..............................

(iii) கடந்த ஆண்டிலும் இவ்வாண்டிலும் இருந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?.........................................





**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

**1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.11.26 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.**

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 183**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### வழி காட்டுங்கள் 1



### அறிவுக்கு விருந்து - 180 விடைகள்

**போட்டி: 03**

(A)
1. பாதகம்
2. இம்சை
3. பகிரங்கம்
4. பரகசியம்
5. சோர்வு

(B)
1. கட்டளை
2. யோசனை
3. நாணம்
4. திறமை
5. போதனை

**போட்டி: 04**

(A)
1. 63
2. லோக் சபா
3. தஸ்லிமா நஸ்ரின்

(B)
1. மயில்
2. மர அணில்

### குறுக்கெழுத்துப் போட்டி இல.194 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ |
| | ■ | 4 | | ■ | 5 |
| 6 | 7 | | ■ | 8 | |
| ■ | வ | ■ | 9 க | | |
| 10 | | | ■ | ■ | |
| 11 | | ■ | 12 | | |

**மேலிருந்து கீழ்**

01. கால்நடைகளின் தொகுதியை இவ்வாறு கூறுவதுண்டு.
02. தகராறு-ஒத்தகருத்துச் சொல்.
03. பொருட்கள் விற்பனைக்குள்ள இடம்.
05. ஒளி ஒரு வருடத்தில் பயணிக்கும் தூரம்.
07. வர்த்தகர்-ஒத்தகருத்துச் சொல்.
08. வெல்லக் கரைசல்.
10. 'பெரிய' என்றும் பொருள்படும்.

**இடமிருந்து வலம்**

01. இந்திய பிரதமரின் பெயரில் ஒரு பகுதி.
04. தொடர்ந்து செல்லவிடாது இருப்பதைக் குறிப்பது.
06. பெண்-ஒத்தகருத்துச் சொல்.
08. பௌத்தர்களின் வேதநூல் எழுதப்பட்டிருக்கும் மொழி.
09. ஜப்பான் கடந்த ஆண்டு சந்திரனுக்கு ஏவிய ஆய்வோடம்.
10. சுவை, நிறம் உட்பட இந்தத் தன்மையும் இல்லாதிருப்பது சுத்தமான நீரின் பிரதான இயல்புகளாகும்.
11. போக்குவரத்து சாதனம் ஒன்று.
12. பூவின் இதழ் விரியாத நிலை.

**குறுக்கெழுத்துப்போட்டி 191 விடைகள்**

**மேலிருந்து கீழ்**

01. சக்கரம்
02. திராட்சை
03. யானை
05. மறுமை
06. ஆனி
07. இலை

**இடமிருந்து வலம்**

01. சந்திரயான்
04. கலாட்டா
06. ஆறு
07. இனிமை
08. கோசலை

**குறுக்கெழுத்துப் போட்டி -194**
**"விஜய்"**
**த.பெ.எண். 2037**
**கொழும்பு**

**பாராட்டுப் பெறுவோர்**

எஸ்.விஜயகுமார், தரம் - 8A, கலைமகள் த.வித்., கல்லேல்ல.

எம்.ஃபஸ்லான், துந்துவை.

ஜெ.ஹிந்துஜா, தரம் - 7B, கணபதி இ.ம.ம.வித்., கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# எஸ்.எம்.எஸ். அனுப்பும் யானைகள்...!

இன்று காடுகளை அண்டிய பகுதிகளில் வசித்து வருகின்ற மக்களுக்கு காட்டு யானைகளினால் அடிக்கடி அச்சுறுத்தல்கள் ஏற்படுவது வழமையாகிவிட்டது. இதனால், அநேகமானோர் பயிர்ச் செய்கை செய்ய முடியாமலும் வீடு வாசல்களை விட்டும் வெளியேற வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை காணும் பொருட்டு புதிய வழிமுறையொன்றை கென்ய வனவிலங்கு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அதாவது, கைத்தொலைபேசியின் குறுந்தகவல் 'எஸ்.எம்.எஸ்' வழிமுறையை அடியொட்டிய இந்த புதிய வழிமுறை அமைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய கண்டுபிடிப்பை பரீட்சித்துப் பார்ப்பதற்கு 'கிமானி' என்ற யானையே பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய கண்டுபிடிப்பின்படி கைத்தொலைபேசியில் காணப்படுகின்ற 'சிம்' அட்டை போன்ற வடிவிலான ஒரு சிறிய கருவியே பயன்படுத்தப்படுகின்றது. அதாவது, யானையின் கழுத்தில் ஒருபட்டி தொங்க விடப்பட்டிருக்கும். அந்த பட்டியில் இந்த 'சிம்' போன்ற அட்டை பொருத்தப்பட்டிருக்கும். இதேவேளை, இந்த 'சிம்' அட்டையுடன் செய்மதி தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். இதற்கமைய இந்த குறித்த யானை எங்கெங்கு செல்கின்றதோ அதனை ஒரு நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பைப் போல் செய்மதியினூடாக வனவிலங்கு அதிகாரிகள் கண்காணிக்கக் கூடியதாக இருக்கும். 'ராடார்' கருவிகளும் இவர்களுக்கு ஒத்தாசை புரியும்.

எனவே, குறித்த யானையானது காட்டிலிருந்து எல்லை தாண்டி கிராமப் பகுதிகளுக்கு வரும்போது 'சிம்' அட்டை காரணமாக உடனடியாக செய்மதி வழியே வனவிலங்கு அதிகாரிகளுக்கு எஸ்.எம்.எஸ். குறுந்தகவலொன்று கிடைக்கப்பெறும். மறுகணமே அவர்கள் உஷார் நிலையை அடைந்து குறித்த பகுதிக்கு விரைந்து இந்த யானைகளை காட்டுக்குள் விரட்டி விடமுடியும். இதனால், யானைகள் கொல்லப்படுவது தவிர்க்கப்படுவதுடன், எல்லைக்கிராம மக்களும் காக்கப்பட்டு அவர்களின் விவசாய நிலங்களும் காக்கப்படுகின்றன.

சகல வழிகளிலும் நன்மை பயக்கத்தக்க இந்த புதிய நவீன கண்டுபிடிப்பானது பரீட்சார்த்த நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மிக விரைவில் இது நடைமுறைக்கு வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, நொவெம்பர் மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 19, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org